உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி ௨௰.] துந்துபி-ஹு சித்திரை-மீ [பகுதி ௬.

Vol. XX. April—May—1922. No. 6.


ஸ்ரீ:

## தமிழ்வரலாறு.

(பிற்பாகம்-முற்பகுதி)

இதன் முற்பாகம் முன்னமே வெளியிடப்பட்டது. இப்பொழுது இதன் பிற்பாகத்தின் முற்பகுதியும் தஞ்சை ஸ்ரீமான் ராவ்பஹதூர் K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களா லெழுதப்பட்டு 187-பக்கங்களில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

இதில், முதலாங்காலப்பகுதியிற் சங்ககாலவரலாறுகளும், இரண்டாங் காலப்பகுதியிற் சைவவைணவசமயப்ரவர்த்தகர்களின் காலவாராய்ச்சிகளும் விளக்கமாவெழுதப்பட்டுள்ளன.

அவற்றுள், பொய்கையார் பெருந்தேவனார், கல்லாடர், ஔவையார் முதலிய பெயர்படைத்த புலவர்கள் வெவ்வேறுபலருளரென்றுகாட்டியிருப்பது சரித்திர ஆராய்ச்சிசெய்வார் முன்பின் முரணுற்றிடர்ப்படாதிருக்கும்படி சிக்கெடுத்துவிட்டதாயிருக்கிறது

களவியலுரை நக்கீரரெழுதியதன்றென்று வியக்தமாய் நிரூபித்திருப்பது சரித்திரவாராய்ச்சிசெய்பவர்களுக்கு மிகுந்தசாதகமாயுள்ளது.

மற்றும், முதலாங்காலப்பகுதியிலுள்ள நூல்களின்விருத்தாந்தங்களை ஒருநிலைக்களப்படத் தொகுத்தெழுதியிருப்பது தமிழ்நூல்களின் விஷயந்தெரியப்படிப்பவர்க்கு மிகவும் பயன்படத்தக்கது.

இதில், சைவசமயகுரவர்களின் காலவாராய்ச்சி விரிவாயும் தெளிவாயும் எழுதப்பட்டிருக்கிறது. ஆழ்வார்கள்கால ஆராய்ச்சியும் அறிதற்கெட்டிடமட்டில் அடுத்தெழுதப்பட்டிருக்கிறது.

மேலும், ஆராய்ச்சிசெய்து தெளிவடையவிரும்புவார்க்கு இப்புத்தகத்திற் சொல்லிய விஷயங்கள் அவசியம் அறியவேண்டியனவாயுள்ளன.

இன்னும், தமிழ்ப்புலவர்களின் சரித்திரகாலங்களை ஆராய்ச்சி செய்து தெளிவடையவிரும்பும் ஆங்கிலங்கல்லாத தனித்தமிழ்ப் புலவர்களுக்கு இப்புத்தகம் இன்றியமையாததொன்றென்று சொல்லத்தகும். இப்புத்தகத்தையெழுதி வெளியிட்ட பிள்ளையவர்களுக்குத் தமிழுலகம் நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறது. இதன் விலை ருபா 1—8—0 வேண்டுவோர் பிள்ளையவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

---

௨

# அந்தணர் என்போர் யாவர்.

அந்தணர் என்னும் சொல், அம்=அழகிய (செம்மையான), தணர்=தண்மை (குளிர்ந்த தன்மை) யுடையவர் (அதாவது, செம்மையான கருணைவாய்ந்தவர்) என்று பொருள்படும். அங்ஙனம் உயிர்களிடத்திற் கருணையுள்ளார் யாவரும் குணத்தால் அந்தணர் ஆவரேயாயினும் அது, பிராமணர் என்ற ஒரு ஜாதியாரையே சிறப்பாகக்குறிக்கும். இந்தச் சிறப்புப்பொருளை இக்காலத்திற் சில தமிழர்கள் மறுக்கிறார்கள். அவர்கள் எந்த ஆதாரங்கொண்டு மறுக்கிறார்களோ நமக்குத்தெரியவில்லை. திருக்குறள் 3வது அதிகாரம், 10வது செய்யுள் தங்களுக்குச் சான்றாக இருக்கிறதெனக்கூறுவார்போலும். அதாவது:—

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்." என்பதாம்.

இக்குறள் அந்தணர் யாவர் என்று குறிப்பிடவந்ததேயொழிய, அறவோரை வரைய வந்ததில்லை. இச்செய்யுள் உள்ள அதிகாரம் நீத்தார்

பெருமையைக் கூறுவது. அவர்கள் ஐம்புலன்களை அடக்கி யறம் கைக் கொள்ளுபவர். அவ்வறங்களிற் சிறந்ததும், எளிதிற் செயவல்லதும், உலகிற்கு நன்மை தரத்தக்கதுமாயது "அஹிம்ஸை." இந்தத்தர் மத்தை யாவரும் செய்யவேண்டியதாயினும், சிலர் ஜாதிபற்றியும், தொழில் பற்றியும் பழவினையின்பயனுப், ஹிம்ஸையை விலக்க இயலாத வராயிருக்கின்றனர். அறத்தின்ஆறு பலவிதம்; ஆகையால் அறவோரும் பலராவர். என்றாலும், யாதொரு உயிர்க்கும் ஹிம்ஸையைச்செய்வ தில்லை என்று சங்கற்பித்து அவைகளிடம் கருணைபாராட்டுவதையே முக்கியதர்மமாகக்கொண்ட ஒருஜாதியாரனைவரும் அறவோராவர் என்று திருவள்ளுவநாயனுர் "அஹிம்ஸையை" மேலானதர்மமாக உலகத்துக் குத் தெரிவிக்கவும், அதைக்கைப்பற்றிய பிராமணர்களே அறவோர்கள் என்று சிறப்பிக்கவும் அங்ஙனம் கூறினுர் என்று விளங்குகிறது. ஆத லால் இக்குறளுக்கு 'மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டொழுகலான், அந்தணர் என்போரே அறவோராவர்' என்று பொருள்கொள்ளல்வேண்டும். வேறு எவ்விதம் கொள்ளினும் சிறப்பன்று. எளிதிற் பொருள்கோடலும் அன்று. அதிகாரமுறைக்கும் முரண்.

இனி, அந்தணர் என்பது ஒருஜாதியின்பெயராய்ப் பிராமணரையே குறிக்கும் என்பதற்குப் பிறமேற்கோள்களும் உள.

"ஐயர் வேதியர் இருபிறப் பாளர்
மெய்யர் மிக்கவர் மறையோர் பூசுரர்
அந்தணர் நூலோர் அறுதொழிலாளர்
செந்தீ வளர்ப்போர் உயர்ந்தோ ராய்ந்தோர்
ஆதி வருணர் வேத பாரகர்
விப்பிரர் தொழுகுலத் தோர்வேள்வி யாளர்
முப்புரி நூலோர் முனிவ ரென்றிவை
தப்பில் பார்ப்பார் தம்பெயராகும்."

என்ற சேந்தன்திவாகரச்சூத்திரத்தில் அந்தணரைப் பார்ப்பார் என்றும், அறுதொழிலாளர் என்றும் வழங்கப்பட்டிருக்கிறது. இது ஒரு சாதி யாரைக்குறிக்கிறதேயன்றி, குணத்தினரைக்குறிப்பதன்று. இங்ஙனமே, சூடாமணிநிகண்டிலும்,

"ஐயர்வே தியரே நூலோ ரறுதொழி லாள ராய்ந்தோர்
மையில்பூ சுரரே செந்தீ வளர்ப்பவர் தொழுகு லத்தோர்

பொய்யிலந் தணரே யாதி வருணர்முப் புரிநான் மார்பர்
மெய்யர்விப் பிரரே வேத பாரகர் வேள்வி யாளர்''
''இருபிறப் பாளர் பார்ப்பா ரேற்றமேற் குலருயர்ந்தோர்
வருமறையவர்தம்பேராம்'' என்றும்,

ஒரு ஜாதியாரைக்குறித்து வழங்கப்பட்டிருக்கிறது. 'பொய்யிலந்தணர்' என்றுகூறியது அக்காலத்திலேயே போலியந்தணராய் ஏனையோரும், அந்தணர் என்று தங்களை யழைக்க முயன்றது பற்றிப்போலும். திவாகரத்திலும் அங்ஙனமே ''தப்பில் பார்ப்பார்'' என்று கூறியது தப்புடைய பார்ப்பாருமுளர் என்று குறிப்பிக்கிறது. மேலும், குறளாசிரியர், செங்கோன்மை என்ற அதிகாரத்துள்,

''அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியா
நின்றது மன்னவன் கோல்''—என்றும்,

கொடுங்கோன்மை என்ற அதிகாரத்துள்,

''ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்''—என்றும்,

கூறியிருப்பதை ஒப்பிட்டுப்பார்த்தால் அந்தணர் என்பதும் அறுதொழிலாளர் என்பதும் ஒரு ஜாதியாரான பிராமணரைக் குறிக்கின்றனவன்றிப் பொதுவாய் அறவோரைக் குறிக்காமை காண்க.

இன்னும், குறளாசிரியர் 'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில்,

''மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்''

என்று அருளியதில், 'பார்ப்பான் பிறப்பொழுக்கம்' என்பதனால், பிறப்பாற் பார்ப்பானை உணர்த்தியதேயன்றி, பார்ப்பான்குணமுடைய ஏனையோரைக் குறிக்காமை எளிதில் உணரப்படும்.

மேலும், தமிழிற் சேக்கிழார்புராணத்தில் அந்தணர்வீதியென்றும், சுந்தரமூர்த்திநாயனார்சரித்திரத்தில் ''அந்தணர் அடிமையாதல் கண்டிலம்'' என்றும் வழங்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் ஜாதி அந்தணரைக்குறித்தே சொல்லப்பட்டிருக்கின்றன.

இது நிற்க; சிலர் குறளாசிரியர், கிறிஸ்தவமதக்கொள்கையைப் பெரும்பாலும் பற்றினவர் என்றும், வேறுசிலர் சமணமதக்கொள்

கையை உட்கொண்டவர் என்றும், கூறுவர். தமிழரிற் சிலர், வள்ளுவர் ஆதித்திராவிடரின்மதத்தையும் ஆசாரத்தையும் கைக்கொண்டவர் என்று வ்யவஹரித்து, ஆரியால்லாதவரின்மதம் ஒன்று தனியே தென்னாட்டி லிருந்ததாயும், அந்த மதாசாரத்தைக் குறளாசிரியர் குறளில் வெளியிட் டிருக்கின்றனரே யன்றி, ஆரியமதாசாரத்தைச் சொல்லவில்லை என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இவை மெய்யன்று. ஏனெனில், குறளாசிரி யர் அபிப்பிராயத்தை அவர் இயற்றிய நூலிலிருந்தும் அவர்காலத்திருந்த வித்வான்களுடைய மேற்கோளைக் கண்டும் தெரிந்துகொள்ளவேண்டுமே யன்றித், தம் மனம்போனவாறு கூறுவது சரியன்று.

ஆரியத்தில் ஸ்மிருதிகள் எங்ஙனம் தர்மத்தை வேதத்திலுள்ளபடி விளக்குகின்றனவோ, அங்ஙனமே, ஆர்யபாஷை தெரியாதவர்களுக்கும், வேதத்தில் அதிகாரமில்லாதார்க்கும் பயன்படுமாறு, சுருதிஸ்மிருதிகளின் அபிப்பிராயத்தைத் தமிழிற் குறளாசிரியர்செய்ததாகத் திருவள்ளுவ மாலையிற் பலவித்வான்கள்பாடலால் நன்குவிளங்குகிறது. விரிப்பிற் பெருகுமாகையால் வெள்ளிவீதியார்மொழிந்த செய்யுளைச் சான்றாக வரைந்து இதை முடிப்பாம்.

"செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
இதற்குரிய ரல்லாதா ரில்"

இதைப்பார்க்கினும், நமது மதாசாரத்வேஷிகளான பாதிரிகள் அபிப்பிராயமும், தங்கள் நன்மையைத் தாங்கள் தெரிந்துகொள்ளாத நப்பிராமணர்சிலருடைய விபரீதக்கொள்கையும் உண்மையான சாக்ஷிய மாகாது.

டி. வி. சாமிநாத ஐயர்,
பி.ஏ., எல்.டி.,
திரிசிரபுரம்.

ஸ்ரீ:

# புரூரவசரிதை.

[௧௯௮-ஆம் பக்கத்தொடர்ச்சி].

## யாகப்படலம்.

---

இன்னநாள்கழிந்தேதகக்கிரேதையா
முன்னையூழிமுடிந்துகழிந்தன
பின்னையூழிபிறப்பப்பெரும்பயன்
றுன்னுகின்றகருமமுந்தோன்றிற்றே. (1)

கருமந்தானுமெழலுங்கருமத்தாற்
றெருமந்தானுஞ்சிறிதுதெளிந்துவான்
றருமந்தாகினிகொண்கனைத்தண்டுழா
யருமந்தாரமுகிலையருச்சிபா. (2)

ஏதுமன்னனிதயகமலத்தின்
மீதுதோன்றறிவென்னும்விரிஞ்சன்மாட்
டோதுநாதப்பிரணவமுற்றதில்
வேதமூன்றுவெளிப்படத்தோன்றிற்றே. (3)

தோன்றும்வேதச்சுருதிப்பயன்றெரிந்
தான்றபோறிவாலறிந்தானதில்
மூன்றுதானமுழக்கெரியேமுதல்
வான்றரும்பயனல்குமகமெலாம். (4)

மகத்தினால்வருமிந்திரன்வாழ்வென
வகத்தினாடியவலத்தழிந்தனஞ்
சகத்துநாநர்க்கருத்துந்தழங்கழ
விகத்துநாம்பெற்றிழந்தனமேயென. (5)

உருவத்தெய்வவுருப்பசியன்றுகந்
துருவர்ப்போற்றிடச்சொன்னதின்முன்னிடத்
தருமத்தோன்றலுண்டாமென்றதுமிந்தக்
கருமத்தெய்தும்பயனின்கருத்தரோ. (6)

ஆதலான்மகமாற்றுவனூற்றுதற்
கேதுவானதழலினைவிட்டுவிண்
போதுகானிடைபோய்க்கொணர்வேனெனத்
தாதுலாவியகானிடைசார்ந்தனன். (7)

சார்ந்துகானிடைநோக்கத்தகழியுங்
கூர்ந்தவெய்பகொழுஞ்சுடராங்கியு
மார்ந்தசாகைச்சமியுமரசுமாய்ச்
சேர்ந்துநின்றமைகண்டனன்சிறியோன். (8)

பாதவங்களிரண்டையும்பண்டுள
மாதவங்களில்வாங்கியன்மந்திரப்
போதவங்கமறைவழிபொற்புபல்
காதவங்கைசிவப்பக்கடைந்தனன். (9)

ஒன்றையந்தவுருப்பசியாகவு
நின்றவொன்றுதானென்னவுநேர்ந்தவை
துன்றுகின்றதுதோய்புறியாகவும்
வென்றிவேந்தன்கடைந்தனன்மெல்லென. (10)

இரணியப்பெருங்குன்றெனவேந்துதோட்
பாணிவெங்கட்பணைமுகயானையார்க்
காணிவந்ததரும்பொறிமைந்தனித்
தாணியெங்குந்தருமந்தழைக்கவே. (11)

வேறு.

சாகைமாமறையினுவிந்தனத்துறுமங்கிதன்னை
யாகவநீயமாதியாக்கியேயண்டகோடிக்
கேகமாம்புருடனனவெழுமூன்றுயூபஞ்சேர்த்திப்
பாகசாதனனேயாதிசுரர்க்கவிப்பாகநல்கி, (12)

படுப்பனவிதித்தசெங்கணயமேதம்பலவுமாற்றிக்
கடுப்பொடுவாவும்வேகக்கலினவெம்பரிகண்மூடி
விடுத்தொராண்டேகுந்திக்கில்வினையெலாந்தடிந்துமீட்டுக்
கொடுத்தனனசுவமேதமுருத்திரபாகக்கூற்றால். (13)

கூறியமகங்களெல்லாங்குறைதவிர்த்தசுவமேத
நூறுமாங்கியற்றிவேட்டோர்வேட்கைகளனைத்து நூறி
யாறுமாடரவுந்திங்கட்கண்ணியுமணிந்தமுக்க
ணேறினானருளாலும்பரேறினோனேறினானே. (14)

முனிவரமரர்சித்தர்சாரணர் முறையிற்போற்றக்
கனிவருகுமுதச்செவ்வாயரம்பையர்நடனங்காட்டத்
தனிவருகவிகையோங்கச்சாமரையிரட்டத்தாருப்
பனிவருதேறல்தூற்றநிதிகடைக்கணித்தல்பார்க்க. (15)

இலங்குறு மணிமாக்குன்றொன்றிரவியைமுடிமேற்றாங்கி
அலர்ந்தசெங்கமலமாங்கோராயிரம்பொலிந்து தோன்ற
வலந்திகழ்வயிரவாளுந்தாங்கியோர்படங்கர்பீடங்
கலந்தெனவிருந்தகோலமகபதிகண்ணிற்கண்டான். (16)

காண்டலுங்கருணைகூர்ந்து தன்னுடைக்கனகபீடத்
தாண்டவன்பாகநல்கச்சரியாசாட்சியானான்
வேண்டியவேண்டியாங்கெய்தலாற்றவமேமேலு
மீண்டிறமுயலவேண்டுமென்றனரறிவின்மிக்கோர். (17)

திண்பணைமரத்தினுற்றசுடுதொழிற்கனலைச்சேயாய்
நண்புறவளர்த்தலாலேயுள்ளத்தினலிவுதீர்ந்து
விண்புகப்பெற்றானென்றான்மெய்யுணரறிவுபெற்ற
பண்புடைமக்கட்பெற்றார்பெறும்பயன்பகரற்பாற்றோ. (18)

அந்தணரின்றும்வேள்வியாற்றுழியாணிமாட்டுச்
செந்தழல்கொள்வதந்தவுருப்பசியுடனேதின்போட்
சுந்தரப்புறாவாமுன்றேய்ந்திட்டவரிற்றோன்றி
வந்திடுமைந்தனைக்கொள்வனவுலகின்மாதோ. (19)

ஆயிரநயனத்தண்ணலரியணையிருந்தவண்ணல்
சேயரிக்கருங்கட்செவ்வாயுருப்பசிகனகச்செங்கேழ்
வேய்பொருமென்றோளாமேவினன்மெலிவுதீர்ந்தான்
போயகைப்பொருளைத்தேடிக்கண்டநல்குரவோர்போல. (20)

யாகப்படலம் முற்றும்.

## உருப்பசிசாபமடைந்து சாபநீங்குபடலம்.

ஆழியுலகாளியும்விண்ணாளியுமோராளி
சூழுமணிமீது தருநீழலொருசூழ
லேழுலகும்வாழ்வுறவிருந்தனரிருந்த
கேழ்வயிரவாளிறைவனிம்மொழிகிளக்கும். (1)

நிலப்பொறைதவிர்த்தநிருபர்க்காசமுந்நீர்
கலக்குறவெழுந்தவமுதத்தில்வருகஞ்சத்
திலக்குமியையெம்மிளவலன்றுமணமெய்து
நலத்தினைநன்னுமகளோர்நாடகம்வகுத்தாள். (2)

நீயுமதுகாணுதிகோலென்றவனிகழ்த்த
வாயுமறிவாளவனுமன்னபரிசென்னத்
தேயுமதிவாணுதலரம்பையர்செறிந்தே
வேயுமணிமாலைதுகில்வேறணியணிந்தார். (3)

உன்னுரிமையாகியவுருப்பசியைமண்ணு
பொன்னுருவவேடமருளென்றுபுலவோர்மன்
மன்னிடவுருப்பசிமலர்ந்தகமலத்தின்
மின்னுருவவேடமொடுமெல்லெனநடந்தாள். (4)

பஞ்சிகுடிகொண்டபதபங்கயமிலங்க
மஞ்சுகுடிகொண்டகுழன்மாலைபுடைவீழ
நெஞ்சுகுடிகொண்டவறிவோருநிலையோ
நஞ்சுகுடிகொண்டவிழிநன்குழைகடாவ. (5)

கும்பமெனும்விம்பமுலைவம்பொடுகுலுங்க
வம்பரமமைந்தவிடையாடாவினுடைப்
பைம்பொன்மணிமேகலைகுலாவரைபாயுஞ்
செம்பவளவாயிதழின்மூரல்சிறிதெய்த. (6)

செங்கைபயிறண்ணுமைதெழித்திடநல்யாழு
மங்குழலுமோரிசையினுய்பிழிபிலிற்ற
வங்கியமிசைப்பவருகட்டளைவழாது
தங்கியசதுத்துவனியும்முறைதயங்க. (7)

துன்றியகருங்குழலரம்பையர்கள்சூழ
மென்றுகில்வனைந்தவெழிலிக்குள்வருமின்னே
ரொன்றுவமையில்லையுவரித்திரையினூடே
அன்றுவருகின்றவவளேயுவமையாமால். (8)

விண்டுவடிவம்புனைந்துருப்பசிவிருப்பங்
கொண்டகுடநாடகமதாயிடைகுலாவப்
பண்டருமொழிச்சிபாதத்தனிநடத்தை
யண்டர்கள்பிரானவையிலன்பொடுநடித்தாள். (9)

ஆடியமடந்தையமரர்க்கதிபனம்பொற்
பீடிகையிருந்தருள்பெருந்தகைசெழுந்தார்
நீடியபுயத்திணைநிறைந்திடும்வனப்பை
நாடியமனத்தபிநயத்திறன்மறந்தாள். (10)

வையகநிழற்றுகுடைமன்னவன்வனப்பாற்
கையபிநயத்திறமறந்திடுகருங்கட்
டையலைவிளித்தவண்மனத்திடைசலிப்பத்
தெய்வநடனக்கறுவுசெய்திவையுரைத்தான். (11)

வேறு

காரறலனையகூந்தல்வெண்ணகைக்கருங்கட்செவ்வாய்
வாரறவளர்ந்தகொங்கைவனிதைகேளொருவன்மாட்டே
பேரறிவதனாற்பெற்றவிஞ்சையிற்பிழைத்தோர்யாரு
யோரறிவுடையவர்க்கவுயிரிடையுதிப்பருண்மை. (12)

இன்றுநீயென்பாற்பெற்றவிஞ்சையையிதயம்வேறாய்
மன்றிடையெவருமெள்ளமறந்தனையாதலாலே
சென்றுநீயைம்பத்தையாண்டரசமர்ங்கொடியாய்ச்செந்தேன்
றுன்றுபூந்திணர்க்குழாரவனத்திடைத்தோன்றுகென்றான். (13)

என்னவப்பரதவாசாரியனுரைத்திடுஞ்சாபத்தை
மன்னினசின்னாள்போயம்மன்னனுமறிநீர்வையந்
தன்னிடைச்சார்ந்துகாமச்சலதியினமிழ்ந்தித்தென்கா
றுன்னியமலைச்சார்வெய்திச்சோலைகடோறுஞ்சென்றுற்றார். (14)

ஆங்கறைந்திடுங்குமாரவனமென்பதியில்வேற்செங்கைக்
காங்கயன்றவஞ்செய்தானோர்காலமங்காலந்தன்னிற்
கோங்கலர்முலையார்யாருமிவ்வனங்குறுகிற்கோளிற்
பூங்கொடியாகவென்றுபுகன்றதோர்சாபமுண்டால். (15)

அவ்வனத்தருகினாங்கோர்மாதவிச்சூழலன்மி
மைவரைந்திடுங்கண்ணாளுமன்னனுமலர்ப்பூஞ்சேக்கைச்
செய்வகைக்கலவிக்கின்பந்தெரித்திடுமுடல்காட்டி
நவ்வியிற்சிறந்தாண்மெல்லவெழுந்தயனடந்தகாலை. (16)

சொல்லியவனத்தினெல்லைச்சூழலிற்றுணைப்பொற்பாதப்
பல்லவமிதித்தலோடும்பண்டுளபடிவநீங்கி
யொல்கியவிடையேயல்லாதுருவமுந்திரியச்செந்தேன்
மல்குபூங்கொடியின்கோலமருவினபுலன்கண்மாறி. (17)

கன்றியவூடலாலேதீர்ந்தவள்கமலப்பாத
மொன்றியசுவடுநோக்கிச்சென்றனனுருவங்காணான்
மன்றலார்குழலாயெங்ஙன்மறைந்தனைகொல்லோவென்னக்
குன்றுறழ்தோளான்பட்டதன்மையார்குணிக்கற்பாலார். (18)

வரைகளுஞ்சுனையுமாறுந்தடங்களுமலர்ந்ததண்பூ
விரைகெழுகாவும்யாவும்பெயர்சொலிச்சொலிவிளிக்கும்
புரைதபுமஞ்ஞைபன்னம்பொறிவரிக்குயில்கள்காணிற்
றிருவனாளென்னச்செல்லுமகன்றிடிற்றிகைக்குஞ்சிந்தை. (19)

பூத்தபூங்கொம்பர்காணிற்பொற்கொடியென்னும்பூந்தே
னார்த்தசேதாம்பல்கண்டாலதரங்கள்துடிக்குநிற்குஞ்
சேந்தமென்கமலநீலமலர்களுந்தெரியிற்பூமி
தூர்த்தனங்கெய்துந்தன்மையாதெனச்சொல்லற்பாற்றே. (20)

பச்சிளங்கொடிகள்காணிற்படர்ந்தொசிந்திடுதல்கண்டாற்
கச்சிளமுலையாயென்னக்கைகளாற்புல்லிப்புல்லிப்
பிச்சரிற்பிதற்றியுள்ளம்பேதுறுநாளிலோர்நாண்
முச்சகம்புரப்போனாங்கோர்கொடியொடுமுயங்கினானே. (21)

அக்கொடியன்னமன்னனணிமணிக்கரத்திற்றீண்டிச்
சக்கரத்தலைவனான தசரதராமன்றாள்கள்
புக்கிடக்கிடந்தகல்லிற்பொன்னுருப்பொலிந்ததென்ன
மைக்கருநெடுங்கட்செவ்வாய்மடவரலாயிற்றன்றே. (22)

செய்ப்படுகமலச்செவ்வித்திலகவாண்முகத்துச்செவ்வாய்
மைப்படிகூந்தலாளைவனந்தொறுந்தேடிக்காணா
தெய்ப்பொடும்வருந்துவானுக்கெளியளாய்வலியவேதன்
கைப்படுமென்னிலெய்துங்களிப்பினையுரைப்பதென்னே. (23)

உள்ளுயிர்பிரிந்தவாக்கையுயிருற்றதெனவும்பர்
பள்ளநீரமுதமீட்டும்பெற்றதோர்பரிசுப்போல
வள்ளைவார்குழைபாள்விம்ப வளமுலைப்போகமாந்தித்
தெள்ளுதெண்கடல்சூழ்வைப்பிற்றிகிரியொன்றுருட்டுநாளில் (24)

தேயுநூனுசுப்பினஞ்சொலுருப்பசிதிருவயிற்றி
லாயுவேமுதலாவெண்மருகித்தனரவருளாயு
நேயமாம்வழிவந்தோர்கண்மதிகுலநிருபாகித்
தாயெனவுலகுக்கெல்லாந்தனிக்குடைநிழற்றினாரே. (25)

உருப்பசி சாபமடைந்து சாபநீங்குபடல முற்றும்.

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

# பல்லவர் கோயில்கள்.

—o—

(கசரு-ஆம்பக்கத் தொடர்ச்சி.)

## iii. குடைவரைக்கோயில்களின் உற்பத்தி

மண்டகப்பட்டுச்சாஸனம், அப்போதிருந்த கற்களாற் கட்டப்பட்ட கோயில்கள் இப்போது ஏன் காணப்படவில்லையென்பதையும் தெரிவிக்கின்றது. ஆகவே, "மஹேந்திரன்காலத்திற் கட்டப்பட்டு அழிந்து போனகோயில்களின்பாகங்கள் ஏதாவது இப்போது அகப்படக்கூடுமா? அப்படிக்கூடுமானல் எங்ககப்படும்?" என்னும் கேள்வி எழும்புவது இயற்கையே.

அதற்குப் பதில் பின்வருமாறு:—மஹேந்திரவர்மன் தன்னுடைமுழுவதிலும் கோயில்கள் கட்டினன். காஞ்சீபுரம் அவனுக்குத் தலைநகராயிருந்தமையால் அங்கு அவன் நிச்சயமாகக் கோயில்கள் கட்டியிருத்தல் வேண்டும். ஆனல், காஞ்சீபுரம் பாறைகளில்லாச் சமவெளியிலிருப்பதால் மண்டகப்பட்டுச்சாஸனத்திற்குறிக்கப்பட்ட, கல் சுண்ணம்பு உலோகம் மரம் முதலியவைகளைக்கொண்டு கட்டிய கோயில்கள் அங்கேதான் நமக்ககப்படும்.

ஆகவே காஞ்சீபுரத்தையாராய அங்கே சென்று அங்குள்ள ஒவ்வொரு கல்லையும் நன்ருய்ப் பரிசோதித்தேன். நான் கஷ்டப்பட்டது வீண்போகவில்லை ஏகாம்பரநாதஸ்வாமிகோயிலைப் பரிசோதித்துவரும் போது அங்கு ஒருமண்டபத்தைக் கண்டேன். அதற்குப் "பௌர்ணமி மண்டபம்" எனப் பெயர். அது முதற்பிராகாரத்துள்ள, ஆயிரக்கால் மண்டபத்தையொட்டி அதற்குப் போகும் வழியாகவுபயோகப்படும் பள்ளிகோபுரத்திற்குமேற்காக இரண்டாம்பிராகாரத்தில் இருக்கின்றது. (அதாவது, ஏகாம்பரநாதஸ்வாமிகர்ப்பக்கிரஹத்திற்குத் தெற்காக இரண்டாம்பிராகாரத்திற் புதுக்கட்டிடம் ஒன்றிருக்கிறது. அதன் பக்கத்தில் இப் பௌர்ணமிமண்டபம் பாழாகிக் கிடக்கின்றது.)

இம்மண்டபம் பலவிடங்களிலிருந்து கொணர்ந்துசேர்க்கப்பட்ட கற்களாற் கட்டப்பட்டது. அதிலுள்ள தூண்களெல்லாம் அநேகமாகப் பல்லவர்காலத்திற் செதுக்கப்பட்டவைகளை யொத்திருக்கின்றன. அம் மண்டபத்தின் முன்வரிசையிலுள்ள ஆறுதூண்களும் மஹேந்திரவர்மனது குகைகளிலுள்ளவைகளைப் பெரிது மொத்திருக்கின்றன. அவைகள், தாமரைமலர்களாற் சித்திரிக்கப்பட்ட சதுரத்தூண்களாகும். அவைகளில் ஒருதூணில்மட்டும் மேலே நான்குபக்கங்களிலும் ஒரு சாஸனம் எழுதப்பட்டிருக்கின்றது.

அதைப்பார்த்தவுடன் எனக்குண்டான ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. அச்சாஸனம் வடக்கு மேற்கு கிழக்கு ஆகிய மூன்றுபக்கங்களிலும் தெளிவாயிருக்கின்றது. அது, அதைவெட்டுவித்த அரசனது விருதுகளின்வரிசையொன்றை யுடைத்தாயிருக்கின்றது. அவ்வரசன் முதலாம்மஹேந்திரவர்மன் என்பதிற் சந்தேகமேயில்லை. தெற்குப்பக்கத்தில் "அபிமுக" "சித்திரக்காரப்புலி" "கூற்றம்பு" என மூன்று பெயர்க ளிருக்கின்றன. அவைகள் மஹேந்திரவர்மன்விருதுகளே.

அபிமுகவென்பது, திருச்சிராப்பள்ளி மேல்குகையிலுள்ள மூன்றுவதுதூணில் முதல்வரியி லிரண்டாவதுவார்த்தையாகும். †

சித்திரக்காரப்புலியென்பது, பல்லாவரம்சாஸனத்திலுள்ளது. *

கூற்றம்பு என்பது, திருச்சிராப்பள்ளி மேல்குகையில் நான்காவது தூணில் மூன்றுவது வரியில் முதல்வார்த்தையாகும். †

காஞ்சீபுரம்சாஸனத்தில் வடக்குப்பக்கத்திலிரண்டாவதுவார்த்தையாகிய "வம்பர" வென்பது திருச்சிராப்பள்ளி மேல்குகையிலுள்ள நான்காவது தூணில் நான்காவதுவரியில் முதல்வார்த்தையாகும். †

மஹேந்திரவர்மனது இவ்விருதுகள்யாவும் பலபாஷைகளிலிருந்து வந்தவைகளாகக் காணப்படுகின்றன. சில ஸமஸ்கிருதத்திலிருந்தும்

---

† South Indian Inscriptions Vol. I. pl. and my english book Pallava Antiqutes Vol. I pl. XXIII.

* G. O. No. 538. Public July 1909; Report on Epigraphy for 1908, 1909. Part II No. 14, 75.

சில தமிழிலிருந்தும் மற்றுஞ்சில தெலுங்கிலிருந்தும் வந்தவைகளாகக் காணப்படுகின்றன. இவ்விஷயத்திற் கோபிநாதராவ் அவர்கள், "இதனுடன் மஹேந்திரவர்மனது தெலுங்குவிருதுகளின் தன்மையைப்பற்றியறிந்தவர்களுள் நான் முதலாமவன் என்பதைத் தெரிவித்தால் உங்கட்கு ஆச்சரியமாகத்தானிருக்கும்..............என்னை முதலில் மயக்கிய வார்த்தை 'நில்வுலேநெயம்பு' அதாவது 'நிறுத்தமுடியாதநேசம்'; 'நெயம்பு' என்பது நேசமென்பதின் மரூஉ. இது வெங்கையாவாற் சொல்லப்பட்டது. இவ்வெண்ணம் அவருக்குச் சொந்தமாகவுண்டாகாததாதலால் அதைத் தெலுங்குபாஷையைச்சேர்ந்ததென்று கூறியதற்குக் காரணங்கூறமுடியவில்லை. நான் இன்னும் சிலவற்றை விளக்கிச் சொல்லமுடியவில்லை. 'நயம்பு' சாந்தமாயிருப்பவன் அல்லது சாந்தகுணம். 'கறும்பு' (குறும்பு) விரோதமானது. குற்றம்பு (கூற்றம்பு) யமன் சாவு இவ்வார்த்தைகள் தமிழ்ப்பகுதிகளையும் தெலுங்குப்புணர்ச்சிகளையு முடைத்தாயிருக்கின்றன" என எழுதினார்கள்.

மஹேந்திரவர்மனுக்குத் தெலுங்குவிருதுகள் எங்ஙனம்வந்தன? அதற்கு நான் மஹேந்திரவர்மனாவது அவன் தகப்பனாவது தெலுங்கு நாட்டை ஆண்டிருத்தல்வேண்டும் என அபிப்பிராயப்படுகின்றேன். ஆனால் அக்காலத்தில் தமிழ்நாடு எதுவரை பரவியிருந்ததென்பதை யறியவேண்டிய தவசியமாகின்றது.

"வடஆற்காடுஜில்லாவில் தற்காலத்தில் தெலுங்குபாஷைவழக்கிலிருந்தாலும் அதேஜில்லாவிலுள்ள தொண்டைமாநாடு, காளஹஸ்தி, திருப்பதி, திருச்சானூர், யோகிமல்லாவரம் முதலிய நகரங்களிலுள்ள பழையசாஸனங்கள்யாவுந் தமிழிலேயேயிருக்கின்றன. 12, 13-நூற்றாண்டுகளில் நெல்லூரிலும் அப்படியேயிருக்கின்றது. ஆகவே, மேலே கூறிய நகரங்களையும் நெல்லூர்ஜில்லாவின் தென்பாகத்தையும் உள்ளிட்ட நாடானது ஆதியில் தமிழ்நாடேயென்றும், அங்குள்ளபாஷை தெலுங்காக மாறினது விஜயநகரத்தரசர்காலத்திலென்றும் நாம் நிச்சயிக்கலாம்". ‡

மேலேகூறியதிலிருந்து தற்காலத்தியநெல்லூர்ஜில்லாவே முற்காலத்தில், தமிழ்நாட்டிற்கும் தெலுங்குநாட்டிற்கு மிடைப்பட்டநாடாகு மென்பது போதரும்.

‡ G. O. Nos. 678, 679, 12th Aug. 1914 p 7.

ஆகவே, மஹேந்திரவர்மனாவது அவன் தகப்பனாவது நெல்லூருக்கு வடக்கேயுள்ளநாட்டையாண்டிருத்தல்வேண்டும்.

மஹேந்திரவர்மன்காலத்திற்குமுற்பட்டகோயில்கள் தமிழ்நாட்டிலில்லை யென்றும், மலைகளிற் கோயில்கள் செதுக்கும்வழக்கம் மஹேந்திரனால்தான் தமிழ்நாட்டிற்குக் கொணரப்பட்டதென்றும் மேலேகூறினோம். அவ்வழக்கம் எந்நாட்டிலிருந்து கொணரப்பட்டது? மஹேந்திரவர்மன் தெலுங்குநாட்டையாண்டதால், கிருஷ்ணாவின்கரையில்தான் அவனுக்கு அவ்வெண்ணம் உதித்திருக்தல்வேண்டும். அங்கு, கிருஷ்ணாவின் வடகரையிற் பெஜவாடா, மொகல்ராஜபுரம் முதலிய இடங்களிலும் தென்கரையிற் சித்தன்னவாசல், உண்டவல்லி முதலிய இடங்களிலும் குகைக்கோயில்க ளிருக்கின்றன.

இதுவரையில் ஒருவரும் அவைகளை நன்றாய் ஆராய்ந்து முடிவுரை கூறவில்லை. அவைகளில் உண்டவல்லிக்குகைகளை நன்றாய் ஆராய்ந்த ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஸர்வால்டர் எலியட் ¶(Sir walter Elliot) என்பவருக்கு அவைகளுக்கும் மாமல்லபுரத்திலுள்ளகோயில்களுக்கு முள்ள ஒற்றுமைகள் தோன்றினாலும் அவைகளை நன்றாக ஆராய்ந்துபாராததால் அதற்குத் தகுந்த ஆதாரங்கள் அவராற்கூறமுடியவில்லை. ஸூவெல் என்பார் (R. Sewell) அவை சளுக்கியர்களாற் செதுக்கப்பட்டவை என்னும் எண்ணமுடையவராயிருக்கின்றார். †

ஆனால், H. கிருஷ்ணசாஸ்திரிகள் சளுக்கியர்காலத்திற் குகைகளை வெட்டப்படவில்லையாதலால் அவை சளுக்கியர்காலத்தைச்சார்ந்தவையல்லவெனவும், ஓரிஸாக்குகைகளுக்கும் அவைகளுக்குமுள்ள சிலவொற்றுமைகளைக்கொண்டு அவை கி. பி. முதல் அல்லது இரண்டாம்நூற்றாண்டைச் சார்ந்ததாகுமெனவுங் கூறுகின்றார். *

உண்டவல்லிக்குகையின்வடிவு நான் எனது பிரஞ்சுப்புஸ்தகமாகிய 'Archeologie du Sud de L'Inde' என்னும் புத்தகத்தில் விவரித்

¶ Ind Ant Vol V p 80.
† List of Antiquities Vol I p 77.
* G. O. No. 538, 28th July 1909, Part II No. 13 p 74.

திருக்கும் சளுக்கியரது வடிவை யொக்கவில்லை.'‡ உண்டவல்லிக்குகைகளின்முன் நின்று அவை ஒவ்வொரு நுட்பவேலைகளிலும் மஹேந்திரவர்மனது குகைகளை யொத்திருப்பதைப் பார்த்ததும் எனக்குண்டான ஆச்சரியத்திற் களவேயில்லை.

1 அவைகளின் நிலப்படங்கள் ஒன்றாகவே யிருக்கின்றன.

2 தூண்கள் தாமரைமலராற் சித்திரிக்கப்பட்ட சதுரபாகங்களை யுடையனவாயிருக்கின்றன.

3 துவாரபாலர் நிற்கும்விதம் ஒன்றாகவே யிருக்கின்றது.

4 நிலைகளின்மேலும் மாடங்களின்மேலும் 'இரட்டைத்திருவாட்சி' என்னும் தோரணங்கள் காணப்படுகின்றன.

தவிர, அங்குள்ள கூடுகளிற் பல்லவர்காலத்தியதைப்போலவே கந்தர்வமுகம் காணப்படுகின்றது. அங்குள்ள மாடங்களெல்லாம் மாமல்லபுரம் 'பகீரதன்தபசு' என்னும் பாறையிலுள்ள சிறியகோயிலை யொத்திருக்கின்றன. அங்குள்ள அனந்தசயனமூர்த்தி மாமல்லபுரத்திற் கலங்கரைவிளக்கத்திற்குச் சமீபமாயுள்ள மஹிஷாஸுரமர்த்தனி குகையிலுள்ள அனந்தசயனமூர்த்தியைப் போலவே யிருக்கின்றார். உண்டவல்லியிலிருந்தமூர்த்தி உடைந்துபோய்விட்டது. தற்காலத்திற் காணப்படுவது அவ்விடத்திலேயே செய்யப்பட்ட சுண்ணாம்பு விக்கிரகமே. நன்றாக ஊடுருவிப்பார்த்தால் அம்மூர்த்தி ஒருகாலத்து மாமல்லபுரம் சிங்கவரம் முதலிய இடங்களிலுள்ளவைகளைப்போலவே கையைநீட்டிக்கிடந்ததென்பதை யறியலாம்.

இவ்வளவுதூரம் பல்லவர்குகைகளுக்கு ஒற்றுமையுள்ள உண்டவல்லிக்குகைகள் யாராற் செதுக்கப்பட்டன?

அக்குகைகளையுடைத்தான வெங்கிநாடு கி. பி 673ல் ஸர்வலோகாச்ரயன் சந்தலூர்க் கிராமத்தைத் தானம்† செய்தபொழுது கீழைச் சளுக்கியரது ஆட்சியின்கீழிருந்தது. அன்றி, சுமார் கி. பி. 640-ல் அந்நாடு இரண்டாம் புலிகேசியின்கீழ்ச் சிற்றரசனான முதலாம்விஷ்ணுவர்த்தனனாளுகையின்கீழிருந்தது.* ஆனால், இந்திரவர்மன் இராமதீர்த்தம் சாஸனஞ் செய்தபொழுது அது விஷ்ணுகுண்டினர் ஆளுகையின்கீழிருந்தது. || தவிர, விஷ்ணுகுண்டினவிக்கிரமேந்திரவர்மனது

‡ Archeologic du Snd de L'Inde Tome I. Architecture ps. 173, 174, 175 and pt CLVIII B.

† Ep. Ind. Vol VIII No. 24.

* Timmapuram Plats—Ep. Ind. Vol IX p 317.

|| Ep. Ind. Vol XII No. 17. p 183.

சிக்குலாதானத்திலுள்ள முத்திரையில் உண்டவல்லி (படம் 2) சீயமங்கலம் முதலிய இடங்களிலுள்ள தூண்களிற் சித்திரிக்கப்பட்டிருக்கும் சிங்கங்களையொத்த சிங்கம் ஒன்றிருக்கிறது. இராமதீர்த்தம் சாஸனத்திலும் அவ்விதமாகவே யிருக்கின்றது.$ ஆகவே அவ் வெங்கிநாட்டைச் சளுக்கியர்களுக்கு முன்பு விஷ்ணுகுண்டினர்கள் ஆண்டுவந்தனரென்பதூஉம் உண்டவல்லிக்குகை விஷ்ணுகுண்டினர்களாற் செதுக்கப்பட்டவையென்பதூஉம் போதரும்.

இதுகாறுங்கூறியவாற்றால் மஹேந்திரவர்மன் உண்டவல்லிக்குகைகளையே மாதிரியாகக்கொண்டு தமிழ்நாட்டிற் கோயில்கள் வெட்டினானென்பது உறுதியாயிற்று. இச்சிற்பசாத்திரவொற்றுமையன்றி வேறொன்று மிருக்கின்றது.

பல்லவவமிசாவளியில் ஸிம்ஹவிஷ்ணுவின் மகனாக மஹேந்திரன் எனப் பெயர்கொண்டவர் ஒருவருமில்லை. ஆகவே முதலாம் மஹேந்திரவர்மன் உண்மையில் அப்பெயர்பூண்டவர்களுள் முதல்வனாகின்றான். திருச்சிராப்பள்ளி, பல்லாவரம் முதலிய இடங்களிலுள்ள சாஸனங்களில் இவனது பெயர் 'ஸ்ரீமஹேந்திரவிக்ரம'‡ என எழுதப்பட்டிருக்கின்றது.

விஷ்ணுகுண்டினவமிசத்தில் விக்கிரமேந்திரவர்மன் எனப் பெயர் பூண்டவர்க ளிருக்கின்றார்கள். சிக்குலாதானம், ¶

மாதவவர்மன்
|
விக்கிரமேந்திரவர்மன் (I)
|
இந்திரபட்டாரகவர்மன்
|
விக்கிரமேந்திரவர்மன் (II)

என்னும் வமிசாவளியைக் கொடுக்கின்றது. 1914ம் வருஷத்திற் கண்டுபிடிக்கப்பட்ட விஷ்ணுகுண்டின சாஸனம் † ஒன்று விக்கிரமேந்திரவர்மன் என்பது விக்கிரமஹேந்திரவர்மன் என்பதன்மரூஉ என்பதைத் தெரிவிக்கின்றது. ஆகவே ஸிம்ஹவிஷ்ணு விக்கிரமேந்திரவர்மன் என்னும் விஷ்ணுகுண்டின அரசனதுபுதல்வியை மணந்து அவளுக்குப்பிறந்த பிள்ளைக்குப் பாட்டன்பெயரான மஹேந்திரவிக்கிரமன் என்னும் பெயரைச் சூட்டியிருத்தல் வேண்டு"மென நான் ஊகிக்கின்றேன்.

---

$ Ep. Ind. Vol XII No. 17. p. 133.

‡ பின்னால் படம் 21 and V.

¶ Ep. Ind. Vol IV No. 25 p 195.

† No. 7 of Appendix A. G. O. No. 920 4th Aug. 1914 Part II No. 35.

சிக்குலதானம், முதலாம்விக்கிரமேந்திரவர்மனது தாயார் வாகாடகவமிசத்தைச்சார்ந்தவளெனக் கூறுகின்றது. அஜந்தாவிலுள்ள குகைகளெல்லாம் வாகாடகவமிசத்து அரசர்களால் வெட்டப்பட்டனவாகும். அக்குகையில் வாகாடகர்களது சாஸனங்கள் யதேஷ்டமாகக் காணப்படுகின்றன. அவைகளுள் 16, 17-குகைகள் ஹரிஷேணன் என்னும் அரசனால் வெட்டப்பட்டனவாகும். அங்குள்ள அவனது சாஸனங்களால் அவனது ராஜ்யத்தில் தெலுங்குநாட்டின் ஒருபாகமுமிருந்ததெனத் தெரிகின்றது.* ஆகவே, வாகாடகரது சம்பந்தத்தால் விஷ்ணுகுண்டினர்கள் கிருஷ்ணாநதிக்கரையிற் குகைகள்செதுக்கக் கற்றுக் கொண்டன ரென்பதும் அவ் விஷ்ணுகுண்டினரது சம்பந்தத்தால் மஹேந்திரன் தமிழ்நாட்டிற் குகைக்கோயில்கள்செதுக்க வெண்ணங் கொண்டனனென்பதும் போதரும்.

இதுகாறுங் கூறியவாற்றால்,

1 தமிழ்நாட்டுப் புராதனக்கோயில்கள் கல், சுண்ணாம்பு, உலோகம் மரம் முதலியவைகளை யுபயோகித்துக் கட்டப்பட்டு வந்தவைகளே; அவைகள் அழியக்கூடிய சாமான்களாற் கட்டப்பட்டுவந்தமையால், காலக்கிரமத்தாலாவது மனிதர்களாலாவது அழிந்திருத்தல் வேண்டும்.

2 பாறைகளிற் கோயில்கள்செதுக்கும்வழக்கம் எப்பொழுதும் தமிழ்நாட்டிற் பரவியிருக்கவில்லை. ஆனால், திடீரென்று ஏழாம்நூற்றாண்டினாரம்பத்தில் இப்புதுவழக்கம் தமிழ்நாட்டிற் பரவத்தொடங்கியது.

3 இப்புதுவழக்கத்தைத் தமிழ்நாட்டிற்குக் கொணர்ந்தவன் முதலாம் மஹேந்திரவர்மனாவன.

4 மஹேந்திரவர்மன் பெஜவாடா உண்டவல்லி முதலிய இடங்களில் ஆண்டமையால் அங்கு, தனது விஷ்ணுகுண்டின உறவினர்களாற் செதுக்கப் பட்டவைகளைப் போலவே, தமிழ்நாட்டிலும் செதுக்க வெண்ணங்கொண்டான்.

என்னுங் கொள்கைகள் உறுதியாகின்றன.

(தொடரும்)

கி. நா. சுப்பிரமணியம்,
கும்பகோணம்.

---

* Archeological Survey of Western India. IV p p 124 & 129 No. 622 and 624, of Prof keilhorn's List For a delarted information of this dyhasty Secw A. Smith Paper on 'The Vakataka dynasty of Berar in the 4th and 5th centuries AO' in JR. AS. April 1914.

ஸ்ரீ:

# குறும்பூர்ச்சாசனங்கள்.

(கூ௰-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## சாசனம் V.

(வடபுறம்—மேற்பட்டியல் கீழோரத்திலிருந்து)

விஷயம்:—இவ்வூரார் பெருமாளுக்கு நிலம் தர்மதானம் பண்ணிக் கொடுத்தது.

(1)—லெல்லை — வயக்கலுக்கு கீள்வா — வடஎல்லை—கீழ் — குள் பட்ட—பாயும்—குடி—வல்லால் நீர்பாயும் பாட்டனூர்வருக—முக்காணி யும் இக்காலலாநீர்பாயும்துறகையா துடவல் — லணையும் இக்காலலா நீர்பாய்யும்—வடக்கடைப நில அரைக்காணியும் இத்தறை — லகுடிபலவு க்கு கீள்எல்லை—எல்லைத்துடவல்லுக்கும் ஸ்வஸ்தமங்கலத்தார் கால்னு க்கு மேற்கும்—எல்லைநல்லூர் செழிய—கல்—சம்புக்கும் — மேல்எல்லை (2) (மூன்றுபக்கமும்)—அதச்ச வயக்க—எல்லைக்குநிலமும் இவை—த்துக்கு நாற்றங்கால்—ணைவி—கும்—நல்லூர் எல்லைக்கு—யும்துறகை —ட்டம் பல் தடிஇரண்டினால் — மேதாவிவபக்கல்நிலம் — இக்காலலா நீர்பாயும்—தாவி வயக்கல்—தடி நாலவினால் நிலம் இரண்டுமாவுந்தத்திரு திருவிடையாட்ட—லெல்லை கீள் மைத்திருவாய் போனதெருவுக்கு மேற் கும் தென்னெல்லை—நின்று—நோக்கி போகிற—திருவாழிக்கல்லுக்கு—லெல்லை பள்ளிச்சந்தத்துக்கு கிழக்கும் வடவெல்லை கங்கை — தெற்—வழிக்கு கிழக்கு பாண்டியமூவேந்தரைய உள்ளிட்ட — கிணற்றுக் —டத்துதெக்கில் மதுரை(?)னு (3) வித்துவருககிற-னெல்லை இவெம்பெரு மான்திருவார—ல்விலேநின்று — இவ்விசை — பருநான்கெல்லை படமன கள்ளும் திருமுககால்வட—இவுமாணத்தில் பேசினபடியாயுள்ள திரு விடையாட்டநக — கோடடத்துக்குப்போகிற இடுவைக்கு மேற்கு — நோக்கிப்போகிறதெருவுக்கு வட (கீள்?) சிறை தளை சென்னீர்கூட்டி யெசசோறு கூற்றரிசிமற்றும் எப்பெறபட்ட—நித்துயஉஉ-ஷா நம் பண் ணிக்குடுத்தோம் குறும்பில் இராஜேந்த்ரநல்லூராரோம் இவ்வூரிற் திரு மேற்கோயில் சுந்தரபாண்டியவிண்ணகர் எம்பெருமானுக்கு இப்படி சந்திராதித்தவற் செல்வதாக கலவிலுஞ் செம்பிலும் வெட்டுவித்துக் கொள்வாராக ஸம்மதித்து யஉ௩-ஷா(ந)ம்பண்ணிக்குடுத்தோம். இரா சேந்த்ரநல்லூரோம். சுந்தரபாண்டியவிண்ணகர் எம்பெருமானுக்கு

இப்படிக் கிவை உத்தமன் திருக்குறுங்குடி —ன்சுந்தரபாண்டியசெழிய கோன் எழுத்து இ—உத்தமதொங்கன்எழுத்து. இப்படிக்கிவை சீவல்ல —குறுங்குடிஆன குலசேக(ர) செழியகோன் எழுத்து—இப்படிக் கிவை குறுங்குடி சோமனான இராசநாராயணசெழியகோன் னெழுத்து சோதி யான அழகியபாண்டியதமு—எழுத்து. இப்படிக்கிவை தூர்க்கை (?) சிராம—கோவ (4) இப்படிக் கிவை புருஷோத்தமன் சொக்கன் ஆன குலசேகா இப்படிக் கிவை இடை—குடி எழுத்து. இப்படிக் கிவை சீவல்லவன் விரதமுடித்தான் எழுத்து—நமன்வீற்றிருந்தான் எழுத்து இப்படிக் கிவை—தரையன் எழுத்து இப்படிக் கிவை புருஷோத்தம நாராயனதற்குறியா (ர) தன்மைக்கு—புருஷோத்தமன் சொக்கன் எழுத்து. இப்படிக் கிவை உத்தமன் திருவாய்?க் குலமுடையான் எழுத்து. இப்படிக்கிவை உத்தமன் சொக்கன் எழுத்து. இப்படிக் கிவை ஆதித்தன் சொக்கன் எழுத்து. இப்படிக்கிவை பாக்கான் உத்தமதொங்கன்? எழுத்து. இப்படிக் கிவை சூரியன் பிச்சன் எழுத்து. இப்படிக் கிவை சூரியன் புல்லூரான் எழுத்து. இப்படிக் கிவை இராசராசன் க்ஷத்ர சூடாமணி(?) எழுத்து. இப்படிக் கிவை அரயன் அரிசேகர(?) ஈச்சுர முடையான் எழுத்து. இப்படிக் கிவை உத்தமன அமுதன் தற்குறியா (ர)தன்மை—வீற்றிருந்தான் எழுத்து. இப்படிக் கிவை சோலையரையன் சொக்கன் எழுத்து. இவகள் ?—ன்மைக்கு இப்படி—ஸ—தித்தமைக்கு இவ்வூர் அரையன் உடையநம்பியான—முடிப்பல்லவதரையன்.

குறிப்பு:—ஸாஸ்தமங்கலத்நார்:— 'ஸாஸ்தமங்கலவாவிநாநாராயணென' என்று ஸ்லோகரூபமாய் ஒருவர் இச்சோழபாண்டியன்மன்னூர்கோவிற்சாசநத்திற் சாட்சிக்கையெழுத்துவைத்திருக்கிறார். திருவிடையாட்டம்=கடவுளுக்கு விட்டநிலம். திருவாழிக்கல்=நிலஎல்லைச்சக்கரக்கல். பள்ளிச்சர்தத்துக்குக் கிழக்கும்=ஜைநக்கடவுள்நிலத்துக்குக்கிழக்கும். குறுங்குடி ஆன் = குறுங்குடியான் என்று கொள்வதிலும் குறுங்குடிஆன = 'குறுங்குடி' என்னும் மறுபெயருடையவனான என்றுகொள்வது மிகவும் பொருந்தும். தற்குறி = தன் + குறி அல்லது தத்குறி, கையெழுத்துப்போடத்தெரியாதவனின் அடையாளம். ஆதன்மைக்கு=ஆதற்றன்மைக்கு. பாக்கரன்=பாஸ்கரன். ராசராசன் க்ஷத்ரசூடாமணி முதல்ராஜராஜனுக்கும் 'க்ஷத்ரிய சிகாமணி' (சூடாமணி) என்னும் பட்டமுண்டு. சோழசாசநங்களில் 'க்ஷத்ரிய சிகாமணிவளநாட்டு' என்று வருவதும் காண்க. அரிசேகரஈச்சுரமுடையான்=அரிகேசரி ஈச்சுரமுடையான் என்றிருக்க வேண்டும்.

## சாசனம் VI.

---

விஷயம்:—ஓர் செழியகோன் திருநுந்தாவிளக்குக்காகப் பெருமாளுக்கு நிலம் தானம்பண்ணி இறைசெலுத்தாமற்போக, அவனுக்காக வேளான் ஐயநம்பியும் வேளான் உலகுத்தமனும் இறைசெலுத்துவதாகப் பெருமாளுக்குப் பிடிபாடு எழுதிக்கொடுத்தது.

1. ஸ்வஸ்திஸ்ரீ பூவளர்கிளத்தி மேவிவீற்றிருப்ப மேதகுமாது நீதியில்புணர சயப்போர்மடந்தை—புயத்திருப்ப—மறைநெறிவளர மனுநெறி—வீற்றிருப்ப—ககாசூழ்தா—கடலேழு பொழில் குடைநிழற்கீழ் செங்கோல்நடப்ப கொடுங்கலி—நடுமபிலல தாளியவலவர் செம்பியர் விராடவாாவாபலவர்த—முறைமுறைபணிய ஒருநேமிபினல் மீயோஙக—வளர்மணிமுடி சூடி வீறஙகயமணியணி வனதுறை—ருந்தருளிய மாமுதல்மதிக்குலம்விளக்கிய—கோச்சடையபன்மரான திரிபுவனசக்கரவததி—குலசேகரதேவற்குயாண்டு—ந்ருவதின் எதிராமாண்டு திருவழுதிவளநாட்டு கற்குறிச்சியான ராசராசநல்லூர் வேளான் அய்யநம்பியும் வேளான் உலகுத்தமனும் இவிருவோங்குடகுடநாட்டு குறும்பிலான இராசேந்திரநல்லூர் உகந்தருளின சுந்தரசோழபாண்டிய விண்ணகர் எம்பெருமானுக்குப் பிடிபாடுபண்ணிக்குடுத்த பரிசாவது-

2. எங்கள்ஞாதி சீரிளங்கோ இராசிங்கதேவனான கற்குறிச்சி மூவேந்தவேளா முன்பு குறும்பிலான இராசேந்திரநல்லூர்—று குடுத்த நிலமாவது இவ்வூர் கொட்டி — அரைமாவரைக்காணியும் ஆகநில(ம்) இரண்டுமாவரைக்காணியும் அவர்விற்று விலைகலந்துசெய்து குடுத்தமையில் இநிலம் இரண்டுமாவரைக்காணியையும் இச்செழியகோனர் இவெம்பெருமானுக்கு திருநுந்தாவிளக்கு செலவிதாக திருக்கைய்மலரிலே தன்மதான்மாக நீர்வார்த்துக்குடுத்து இநிலத்துக்கு கடமை குடிமையும் சிறைதளை செந்நீர்வெட்டியும் மற்றும் எப்பேர் - அவர் தாமே இறுத்துகுடுப்பாராக பிரமாணம் பண்ணிக்குடுத்தமையில் அவர் இநிலத்துக்கு கடமை இறாமையில் நாங்கள் இந்நிலத்திலே கடமைபெறவேணும் என்று நின்றிடத்து பலரும் அவர் எழுதிகுடுத்த பிடிபாட்டைக்கண்டு நீங்கள் தன்மவிரோதம்பண்ணவேண்டாம் அவ(ர)ரையே பிடிச்சுக்கொள்ளுமென்று சொன்னடத்து இச்செழிய-

3. கோனூர் முன்னிலலாமையால் இத்திருவிடையாட்டநிலம் இரண்டுமாவரைக்காணிக்கும் வந்த கடமையும் சில்வரியும்—பேர்ப்பட்டதும் நாங்களும்—க்கு சந்திராதித்தவற் செல்வதாக இப்படி சம்மதித்து பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் வேளான் அய்பநம்பியும் வேளான் உலகுத்தமனும் இவ்விருவோமும் சுந்தரசோழபாண்டிய விண்ணகர் எம்பெருமானுக்கு இப்படிஸம்மதித்து பிரமாணம்பண்ணிக்குடுத்த வேளான் ஐய்யநம்பி எழுத்து, இப்படிக்கு வேளான் உலகுத்தமன் தற்குறியாதன்மைக்கு மட்டெழிந்சேன் திருக்கோனூரான உலகசிந்தாமணிபுரத்து கண்டன் உய்யவந்தான் எழுத்து. இப்படிக்கு இவை வேளான் உமையான் எழுத்து. இவர்கள் சொல்ல இப்பிரமாணம் எழுதினேன் இன்னாட்டு கற்குறிச்சியான இராசராசநல்லூர் வேளான் தடியன் எழுத்து. ‖ இத்தன்ம—பதின் எட்டுமண்டலத்து திருவேளைகாறர் ரக்ஷை.

குறிப்பு:—பிடிபாடு=நன்கொடைச் சாசனம். விலைநலஞ்செய்து=விலைச்சாசநஞ்செய்து. சொன்னடத்து=சொன்னவிடத்து. பதினெட்டு மண்டலத்து என்பது தமிழ்நாட்டுப் பிரிவென்றும் 18-பாஷையுடையதாகக் கருதப்பட்ட இந்தியாவின் பிரிவென்றும் தெரியவில்லை, ('பதினெண்புவி ஸ்ரீவைஷ்ணவாள்' என்ற வழக்குச் சில இடங்களி லுள்ளது.) பதினெட்டுநாட்டுமறவர்களும் உண்டு. திருவேளைக்காரர் = தெய்வங்களுக்காவது தெய்வசொத்துக்களுக்காவது கெடுதிவருமிடத்துத் தங்களுயிரைக்கொடுத்து ரக்ஷிப்பதாகச் சபதம் செய்துகொடுத்து ஆயுதபாணிகளாய்க் கோயிலேயேலேயே சாப்பிட்டுக்கொண்டு காத்திருக்கும், பைராகிபோன்றவர்கள். இவர்கள் அக்காலத்தில் அநேகமாயெல்லாக்கோயில்களிலுமிருந்தார்கள். அரமனைகளிலு மிப்படிப்பட்டவருண்டு,

## சாசனம் VII. (குறை)

(வடபுறம் நடுப்பட்டியலின் நடு.)

விஷயம்:—பெருமாளுக்கு நிலம் இறை இறக்கிக் கொடுத்தது.

1. சடையவர்மரான உடையார் ஸ்ரீசோழபாண்டியதேவற்குயாண்டு உயச வது திருவாகனந்தபுரத்துத்தேவர் தேவதானம் ராஜராஜபாண்டியநல்லூர் — கழற்காற்சென்னி இராசேந்திரசோழன்றன்மதலை—த்தியல் சுந்தரசோழபாண்டியர்க்கு—ண்டேற்றத்திய விசேரொன்பதன்கட் சேற்றிற்த்தண்ணீர்பாய்கெண்டை சாரிவணை(ளை) பூமேவு குதிகொண்டுபாய் குடநாட்டே பகுஞ்சதி(?) தண்ட நென்மலி காம்பிலி மகதைபுகழ் குறும்பிலேன்னு மிரிந்தவநல்லூர்க் கெழில்சேர் நன்மைவரப்பண்ணும்-

2. பாண்டிய விண்ணகர் தேவர்கன்மிகளுக்கு ஓ இசைந்து இறை இறக்கிக்குடுத்த பரிசாவது இவ்வூர் அப்பி உத்தமனான ராஜேந்திர செழி...........வேளாளும் அப்பிகொற் (இனிவேறு)

விஷயம்:—கோயில் கட்டினது:—

றருஞேர்விட்டு X தந்தமண்ணிலவுநகின(?) மத்திருக்கோயில் சூழ்சுற்றுலை சீரமைத்திருக்க — கல்லைணத்தொழிற்—வளம்பெருகச் செய்தமைத்து பண்ணறகரிய படைதததிருமால் அண்ணற்றிருமேனி யாக்கி— யிரஞ்சேவடி பிராட்டி திருமாதும் பார்மகளுமென்னுமிரு மடி தா சோதித்திருவுருவும் தொல்சீர் மணவாளராதித் திருவுருவுமாலுக்—

இதற்குக்கீழ் 3-வது பட்டியலிலுள்ள 5-வரியும் இதனுடன்சேர்ந்தனவோ அல்லவோ; எழுத்து விளங்கவில்லை. வடபுறம் நடுவில் தீபத்தூக்குச் சமீபத்தில் அடிப்பட்டியலில்? 'பூமருவிய திருமடந்தையும்' என்று ஆரம்பித்தெழுதியிருக் கிறது. கீழே குனிந்தெழுதவேண்டியதிருப்பதால் எழுதவில்லை. இனிக் கீழைக்கடைசி அர்த்தமண்டபம் 3-வது பட்டியல் 5-வது வரியும் நாலாவது அடிப்பட்டியலும் எழுதவேணும். இதற்குக்கிழக்கே சுவரில் பெரிய எழுத்தில் வரிக்கல்லில் ஓர் குலசேகரனின் சாசனம் இருக்கிறது. நன்றாய்த்தெரிய வில்லை. அதற்குக்கீழ் மிதி பட்டியலிலும் 2-வரி சுற்றுமிருக்கிறது. அடிப் பட்டியலின்கீழ் 7-வரி தளவரிசையின் நெருக்கத்திலிருப்பதால் எழுதமுடிய வில்லை.

குறிப்பு:—'ராசேந்திர சோழன்றன் மநலை — சுந்தரசோழபாண்டியர்க்கு' என்பதைக் கவனிக்க. அரிந்தவன்=அரிந்தவ:=சத்துருவைத் தபிக்கச்செய் பவன். ராஜேந்திரன் என்பதன் பரியாயமாய் வந்தது. தேவர்கன்மிகள்= தேவகாரியஞ்செய்வோர்.

*N. B.*:— அக்காலத்தில் உலகவழக்கில் இலக்கணம் கவனிக்கப்படாத தற்குப் பின்வரும்வார்த்தைகளைக் கவனிக்க:—

ராஜேந்திர, இவைபிற்றுக்கு, தளை, மணை, வையிஷ்ணவர், இன்நிலம், இன்நாடு, தற்ம்மம், கைய்மலர், ஐய்யநம்பி, எழுதிநேன், ஆழ்வாற்க்கு.

வித்வான் ஆ. மா. சடகோப-ராமாநுஜாசார்யர்,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர்,
கெவர்ண்மெண்டுகாலேஜ், கும்பகோணம்.

ஸ்ரீ:

# திருமுருகாற்றுப்படையாராய்ச்சி.

## ஆற்றுப்படை.

ஆற்றுப்படை என்பது ஆறு+படை என்னும் இருசொல்லும் புணர்ந்து ஆற்றுப்படை என்று ஆகி வழியிற்செலுத்துதல் என்னும் பொருளதாம்.

அவ்வாற்றுப்படைதான், பாணாற்றுப்படை கூத்தராற்றுப்படை பொருநராற்றுப்படை விறலியாற்றுப்படை எனப் பலதிறப்படும். அவற்றுள் இம் முருகாற்றுப்படை எதன்பாற்படும் என்று ஆராயின், "தாவி னல்லிசை" என்னும் சூத்திரத்தில் (தொல். பொரு. புற. 36.) "கூத் தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பய னெதிரச் சொன்ன பக்கமும்" என்னும் அடிகளிற் குறிக்கப்பட்ட கூத்த ராற்றுப்படை முதலியவற்றோடு ஒருங்கு எண்ணப்பட்ட 'ஆற்றிடைக் காட்சி....சென்றுபயனெதிரச்சொன்னபக்கமும்" என்பதன்கண் அடங்கு மென்று நச்சினார்க்கினியர் கூறுவர். எனவே முருகாற்றுப்படை என் பதற்கு முருகன்பால் வீடுபெறுதற்குச்சமைந்தானோ ரிரவலனை ஆற்றுப் படுத்தது என்பது பொருள் என்றும் கூறுவர்.

## முருகாற்றுப்படை புலவராற்றுப்படையா ?

இம் முருகாற்றுப்படை மற்றைக் கூத்தராற்றுப்படை முதலியன போல இரண்டாம்வேற்றுமைத் தொகையாகாது ஏழாம்வேற்றுமைத் தொகையாகப் பொருள்கூறப்பட்டுள்ளது; இதனை மற்றை ஆற்றுப்படை கள்போலவே இரண்டாம்வேற்றுமைத் தொகையாகப் புலவராற்றுப்படை யென்று கூறுவாருமுளர். அங்ஙனம் கூறுவதை நச்சினார்க்கினியர் மேற் குறித்த தொல்காப்பியச்சூத்திரத்தின் உரையில் "இதனைப் புலவராற் றுப்படையென்று உய்த்துணர்ந்து பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப் படை யென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க" என்று மறுக்கின்றார். கூத்தராற்றுப்படைமுதலிய இரண்டாம்வேற்றுமைத்

தொகையாகக் கூறப்பட்ட ஆற்றுப்படைகளெல்லாம் ஒழியுமாற்றானுமோம் பாவிகையுமுடைய மக்களிடத்து ஆற்றுப்படுத்துவதாம். ஏழாம்வேற்றுமைத்தொகையாகிய இஃது அங்ஙனமன்றித் தேவரிடத்து மக்களை ஆற்றுப்படுத்துவதாம். இக்கருத்துப்பற்றியே நச்சினார்க்கினியர் இதனைப் புலவராற்றுப்படையென்றுகூற மறுத்தனரோ என்று கருதுகின்றேன். புறநானூற்றிற் புலவராற்றுப்படையென்னும் துறைக்கு உதாரணமாக இரண்டொருசெய்யுட்கள் வந்துள்ளன. அவை மக்களிடத்து மக்களையே ஆற்றுப்படுத்தினவாகக் காணப்படுகின்றன. இதனானும், அவற்றில் ஒன்றன் விசேடவுரையில் உரைகாரர் "தலைவனதியல்பையும் ஊரையுங்கூறி முதுவாயிரவல எம்மூழுள்ளெனத் தன்தலைமைதோன்றக் கூறினமையால் இது புலவராற்றுப் படையாயிற்று" என்று கூறுவதனானும் மேலேகூறியகருத்து வலியுறுத்தப்படுவதாயிற்று. இங்ஙனமன்றி வெண்பாமாலைக்காரர், "இருங்கண்வானத் திமையோருழைப், பெரும் புலவனை யாற்றுப்படுத்தன்று" என்று புலவராற்றுப்படைக்கு இலக்கணங்கூறி,

"வெறிகொ ளறையருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்
கிருளீயு ஞாலத் திடரெல்லா நீங்க
வருளீயு மாழியவன்"

என்று உதாரணச்செய்யுளும் கூறுகின்றார். இவர்கருத்து மற்றைப் புறநானூற்றுரைகாரர் நச்சினார்க்கினியர் ஆகியவர்கள் கருத்தோடு முரண்படுவதாகின்றது. வெண்பாமாலையுரைகாரர் புலவராற்றுப்படை மக்களிடத்து ஆற்றுப்படுத்துவது என்னுங் கருத்துக்கொண்டே, மூலகாரர் தேவர்களிடத்து ஆற்றுப்படுத்தியதை அமைக்கவேண்டி, "உலவா வூக்கமொ டுன்னியது முடிக்கும், புலவராற் றுப்படை புத்தே ட்கு முரித்தே" என்னும் இடம்விளங்காத புறனடைச்சூத்திரத்தான் அமைக்கின்றார். அச்சூத்திரம் செய்தவர்கருத்தும் மக்களிடத்து ஆற்றுப்படுத்துவதே புலவராற்றுப்படை என்பதை மேற்காட்டிய சூத்திரத்திலுள்ள எச்சவும்மை விளக்கும்.

ஆயினும் புலவர் என்று தேவர்கட்குப் பெயருண்மையின் புலவராற்றுப்படை தேவரிடத்து ஆற்றுப்படுத்துவது என்று ஏழாம்வேற்று

மைத்தொகையாகப் பொருள்கொண்டு ஐயனாரிதனார் "இருங்கண் வானத் திமையோருழை" என்று கூறியிருக்கின்றார் என்று கருதலாம். இதற்கு உதாரணவெண்பாவும் இயைபுடையதாயிருக்கின்றது. எனினும், அவர் "பெரும்புலவனை யாற்றுப்படுத்தன்று" என்று கூறியிருப்பது முன் கூறியதையே குறிப்பதாம். எனவே மக்களிடத்து ஆற்றுப்படுத்துவ தற்குப் புலவராற்றுப்படை என்று வழங்குதலும் தேவரிடத்து ஆற்றுப் படுத்துவதற்கு அங்ஙனம் வழங்காமையும காரணமாம் என்பது நச்சி னார்க்கினியர்கருத்தாம். இவற்றாலெல்லாம் முருகாற்றுப்படை புலவ ராற்றுப்படை என்று வழங்கப்பெறுது என்பதே கருத்தாம்.

## ஆற்றுப்படையுட் கூறப்பட்ட தலங்கள்.

அங்ஙனம் ஆற்றுப்படுத்துமிடத்தது தலைவனது ஊரும் பேரும் இயல்புங்கூறி ஆற்றுப்படுத்துவது மரபாம். இவ்வாற்றுப்படைத்தலை வன் முருகவேளாம். அம்முருகவேளது ஊர் அவர் கோயில்கொண் டெழுந்தருளியிருக்குந்தலங்களாம். அத்தலங்களுட்சிறந்தனவான பரங் குன்று திருச்சீரலைவாய் ஆவினன்குடி ஏரகம் குன்றுதோறாடல் பழமுதிர் சோலைமலை முதலியனவே இங்குக் கூறப்பட்டுள்ளன. இத்தலங்களைப் பற்றி நச்சினார்க்கினியர் யாதொன்றும் கூறவில்லை. ஆயினும் ஆறுதலங் கள் கூறப்படவேண்டிய காரணம், அவை கூறப்பட்டுள்ளமுறை, அத் தலங்கள் எவை என்பனபோன்ற ஆராய்ச்சி ஈண்டைக் கின்றியமையா தனவாம்.

முருகக்கடவுட்கும் ஆறு என்னும் எண்ணிற்கும் மிக்க இயைபுண் டாதலின் இங்குத் தலங்கள் ஆறு கூறப்பட்டனவும் இயைபேயாம். ஆற் றுப்படையுள் ஆறுதலங்கள் கூறப்படவில்லை என்றுகூறுவார் கூறுக; ஆறுதலங்கள் என்று அவ்வாற்றுப்படை இடக்குமுறையான் விளங்கு கின்றது. அங்ஙனம் கொள்வதால் யாதோரிழுக்குமில்லை; ஆதலின் ஆறு தலங்கள் என்றேகொள்ளலாம். அன்றியும், நக்கீரரால் ஆற்றுப்படையுட் கூறப்பட்டதலங்கள் ஆறே என்பது அவர் அவற்றைப் பெயர்குறித்தகி லிருந்தும், பிற்பட்ட அருணகிரியார் "சகலமுமுதலாகிய அறுபதிநிலைமே விய தடமயிலதனிலேறிய-பெருமாளே" "ஆறுதிருப் பதியில்வளர்— பெருமாளே" என்று கூறுவனவற்றிலிருந்தும் அறியலாம். எல்லாத் திருப்பதிகளையும் எடுத்துக்கூறுதல் இயலாமையின, கூறப்பட்டதிருப்

பதிகள் ஆறாயினும் மற்றத்திருப்பதிகளையும் குன்றுதோருடல் என்று கூறியதாற் றழுவிக்கொண்டார். அங்ஙனம் அவர் தழுவிக்கொண்டிருக்கிறார் என்பதை,

"ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனும்
காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்"
... ... ... ...

குறமகள் முருகாற்றுப்படுத்த வுருகெழுவியனகரில்,

"வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலு மறிந்த வாறே"

என்று கூறியிருப்பதுகொண் டறியலாம்.

இங்ஙனம் நக்கீரர் பலதலங்களைக்குறித்து அவற்றைக் குன்றுதோருடலின்க ணடக்கிக் குன்றுதோருடலுடன் தலங்கள் ஆறு என்று வரையறுத்ததாகக்கொள்ளல்வேண்டும்.

திருப்பரங்குன்று மருதநிலம்; சீரலைவாய் செய்தனிலம்; ஆவினன்குடி முல்லைநிலம்; பழமுதிர்சோலைமலை குறிஞ்சிநிலம்; என நானிலத்திற்கும் நான்கு தலங்களாகப் பாண்டிநாட்டிற்கூறிச் சோழநாட்டில் மருதவைப்பு ஒன்றுமாத்திரங்கூறிக் குன்றுதோருடலால் எல்லா நாட்டும் எல்லாநிலங்களையும் தழுவியிருக்கிறார்.

இனி அத்தலங்கள் கூறப்பட்டுள்ள முறைமையினைப் பார்ப்பாம். அவை, பரங்குன்று சீரலைவாய் ஆவினன்குடி ஏரகம் குன்றுதோருடல் பழமுதிர்சோலைமலை என்று முறையே கூறப்பட்டுள்ளன. இவற்றுள், பரங்குன்று சீரலைவாய் ஆவினன்குடி பழமுதிர்சோலைமலை ஆகிய நான்கும் பாண்டிநாட்டிலுள்ளதலங்களாம். ஏரகம் சோழநாட்டிலுள்ளது. குன்றுதோருடல் பொது.

பரங்குன்று முருகவேள் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் தலமாதலோடு பரமசிவனுடைய தலங்களிலும் ஒன்றாம். அது ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திகள் ஆகிய இருவருடைய பாடல்பெற்றதாம். அன்றியும், முருகாற்றுப்படையைக்கூறிய புலவர் நக்கீரனார் எழுந்தருளியிருந்த பாண்டிய ராஜதானியாகிய கூடலுக்கு அருகிற் குடபாலுள்ளதாம். அதனை நக்கீரரே "மாடமலி மறுகிற் கூடற்குடவயிற்குன்று" என்று கூறியிருக்கிறார்.

T. 1122.

முருகவேளுக்கே சிறப்பாகவுள்ள மற்றைத்தலங்களினும் பரங்குன்று முருகவேளுக்கும் பரமசிவனுக்கும் பொதுவாகவுள்ளமை கருதியும், தம்நகருக்கு அருகிலுள்ளது கருதியும், பண்டைத்தமிழ்நூல்களாற் சிறப்பித்துக்கூறப்பட்டுள்ளது கருதியும் நக்கீரரால் முதற்கண்வைக்கப் பட்டுள்ளது. அன்றியும், நக்கீரர் பூதத்தாற் பரங்குன்றிலுள்ளகுகையின்கண் வைக்கப்பட்டு, அக்குகையிலிருந்து முருகக்கடவுளைப் பாடத்தொடங்கினாராதலின், முதற்கண், அக்குகைபொருந்திய குன்றின்கண் எழுந்தருளியுள்ள கடவுளைப் பாடினாரென்னவுமாம்.

அதன்பின்னர் முருகவேளுக்குச் சிறப்பாகவுள்ள தலங்கள் கூறுகின்றார். அவற்றுள், சீரலைவாய் பாண்டியர்களுக்கு மற்றொரு ராஜதானியாகிய கொற்கையம்பதிக்கு அணித்தாகவுள்ளது. அங்ஙனமன்றிச் சீரலைவாயே பாண்டியர்களின் பழையராஜதானியாகிய கபாடபுரமோ என்று சிலர் ஐயுறுவார்கள். "செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி செந்திற்பதிநகர்' என்னும் அருணகிரியார்வாக்கும் அதற்கிடம் கொடுக்கும். இவற்றாலெல்லாம் சிறப்புற்ற நகரமான சீரலைவாய் முருகவேளுக்கே சிறந்ததலங்களில் முதன்மையாகப் பரங்குன்றையடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இனி, ஆவினன்குடி பாண்டிநாட்டுள்ள முருகவேள் தலங்களுட் சீரலைவாய்க்கு அடுத்ததாம். அம்முறையே ஆற்றுப்படையுட்கூறப்பட்டுள்ளது. ஆவினன்குடி (வேள்குலத்து) ஆவியர் தலைநகராம். அது ஆவியின் நல்லகுடி என்னும் பொருளுள்ளதாம். அது இக்காலத்துப் பொதுநி என்னும் சொல்லின் மரூஉமொழியாகிய பழநி என்னும் பெயரால் வழங்கப்படுவதாம். (இது விஷயமாக, ப்ரும்மஸ்ரீ சேதுசமஸ்தான வித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள் "ஆவினன்குடி" என்று தலைப்

பெயரிட்டுச் செந்தமிழ்த்தொகுதி-2. பகுதி 1-ல். அருமையாக ஆராய்ச்சி செய்துள்ளார்கள்.)

இனி, ஏரகம் சோழநாட்டுத்தலங்களுட் சிறந்ததாம். "முருகன் தண்பரங்குன்று" "ஒடியாவிழவின்நெடியோன்குன்று" என்று பரங்குன்றும், "செந்தில்-நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறை" என்று சீரலைவாயும் முருகனுக்குரியதாகச் செய்யுள்வழக்காற் கூறப்பட்டுள்ளது போல ஏரகமும் "சுவாமிமலை" என்று உலகவழக்கால் முருகனுக்கு உரியதாகக் கூறப்பட்டுள்ளது. சுவாமி என்பது முருகன்பெயர். ஏரகத்திற்குச் சுவாமிமலையென்ற பெயருண்மை "ஏரகவெற்பெனுமற்புதமிக்க சுவாமி மலைப்பதி மெச்சிய சற்சன" என்னும் அருணகிரியார்வாக்கானறியப்படும். அன்றியும், சுவாமிமலையை அடுத்துள்ள கிராமம் ஒன்று இன்றைக்கும் ஏரகரம் என்று வழங்கப்பெறுகின்றது. அது ஏரகம் என்பதன் மரூஉவாகக் கொள்ளலாம். இன்னும், இவர், திருவலஞ்சுழி மும்மணிக்கோவைபாடினுரென்பவாகலின், திருவலஞ்சுழிக்குச் சமீபத்திலுள்ள சுவாமிமலையையே இவர் ஏரகவெற்பென்று குறித்திருக்கலாம்.

இனிக் குன்றுதோறாடல் என்பது "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்று தொல்காப்பிய அகத்திணையியற்சூத்திரத்திற்கூறியபடி முருகன் குறிஞ்சிநிலக்கடவுளாதலின் அக்கடவுள் தமக்குரித்தாய குன்றுகளின்மேவி யாடல்புரிதலைக் குன்றுதோறாடல் என்றார். "மலையாவையும் மேவிய தம்பிரானே" "பலகுன்றிலுமமர்ந்தபெருமாளே" என்பன அருணகிரியார்வாக்காம். இதற்குமுன்னர்க்கூறிய தலங்கள்போலவே பலகுன்றுகளும் முருகனுக்கே சிறப்பாக உரியனவாம். அக்குன்றுகள் இன்ன நாட்டின என்னும் வரையறையில்லை; ஆதலின் ஓரொருநாட்டிற்கேயுரிய தலங்கள்கூறியபின்னர் ஈற்றிற் குன்றுதோறாடல் என்று ஆசிரியர் நக்கீரர் கூறியிருக்கின்றார்.

இனிப் பழமுதிர்சோலைமலை என்பது திருமால் திருப்பதிகள் நூற்றெட்டில் ஒன்றாகிய திருமாலிருஞ்சோலைமலை என்று கொள்ளவேண்டும். சோலைமலை திருமாலுக்கு எத்துணையுரிமையுடையதோ அத்துணையிற் சிறிது குறைந்தாவது முருகக்கடவுளுக்கும் உரியதாக முற்காலத்து இருந்ததுபோலும். இந்நாளில் முருகக்கடவுளுக்குரிய மற்றைத் தலங்

கள்போல இம்மலை அக்கடவுளுக்கு அவ்வளவு உரிமையுடையதாகக் காணப்படவில்லை. ஆயினும், இம்மலை முற்காலத்து அக்கடவுளுக்கு உரியதாக இருந்தது என்று கருத முன்னோர்களுடைய வழக்காறுகள் உள்ளன. "சேயோங்குதண் திருமாலிருஞ்சோலைம்மலை" என்னும் திருமங்கையாழ்வார்பாசுரத்திற்குப் பரமகாருணிகராகிய பெரியவாச்சான் பிள்ளை, "சேய் என்று க்ஷேத்ரபாலகனுக்குப் பெயராய் அவனவ்விடத்துக் காவலாகச்சொல்லிப்போருவதொன்றுண்டு" என்று வியாக்கியானம் செய்திருக்கிறார். சேய் என்னும் பெயர் முருகக்கடவுளுக்குப் பெருவழக்கேயன்றி க்ஷேத்ரபாலகனுக்கு அத்துணைப் பெருவழக்கில்லை. சேய் என்பதற்கு க்ஷேத்ரபாலகனென்று பெரியவாச்சான்பிள்ளை பொருள் செய்திருப்பதுகொண்டு நாம் அப்பதத்திற்கு முருகக்கடவுள் என்று பொருள்கொள்ளுவது முன்னூல்களுடன் மிகவும் பொருத்தமுடையதாகும் என்று நினைக்கிறேன். அன்றியும், "பஞ்சவர்தம் பங்கங் களைந்தான் பனிரண்டு கண்ணொருவன், பங்கங்களைந்தான் பதி" என்னும் அழகர் கலம்பகச்செய்யுளடிகளில் முருகக்கடவுளுக்கு அம்மலை யுரிமையுடையதுபோலக் கூறப்பட்டிருத்தல் காண்க. அன்றியும், அருணகிரியார் முதலியவர்களும் சோலைமலையை முருகக்கடவுட்குரியதாகக் கூறியிருக்கிறார்கள்.

சிலர், முருகாற்றுப்படையுள், 'பழமுதிர்சோலைமலை' என்று கூறியது சோலைமலை என்னும், தலத்தையன்று என்று கூறுவர். அதற்கு அவர், மெச்சும்புலமை நச்சினார்க்கினியர், மற்றைத்தலங்களை 'என்னும் திருப்பதி' 'ஒரு திருப்பதி' 'என்னும் ஊர்' என்று அடைகொடுத்தும் விளக்கியும் போயிருக்கின்றார் சோலைமலைக்கு அங்ஙனம் அடைகொடுத்தும் விளக்கியும் கூறவில்லை. என்று ஒரு காரணம் காட்டுவர்.

சோலைமலைஎன்பது மதுரைக்குவடக்கே ஏறக்குறையப்பன்னிரண்டு மயில் தூரத்துள்ள ஒரு மலையாம். மற்ற ஒரு மலையினும் இல்லாது இம்மலைக்கே சிறப்பென்று சொல்லும்படி பல சோலைகளாற் சூழப்பட்ட மலையாதலின், இது, சோலைமலையென்று பிரசித்தமாக அக்காலத்து வழங்கப்பட்டுவந்தது கருதி, நச்சினார்க்கினியரும், சோலைகளையுடையமலையென்றுகூறி விளக்காமலே போயினர் என்றுகொள்வதே பொருத்தமுள்ள

தாம். சோலைகளாற் சூழப்பட்டிருப்பதே அம்மலையின்சிறப்பு என்பதனை, நம் சடகோபரும் தமது அருளிச்செயலில், "வளரிளம்பொழில் சூழ்மாலிருஞ்சோலை" என்று விதந்து கூறியருளியிருக்கின்றார்.

அங்ஙனம், சோலைகளாற் சூழப்பட்டமலை இரண்டுண்டு என்றும், அவ்விரண்டில், இதனை வேறுபடுத்தற்கு இது பெரிதாக இருந்தமை பற்றி, இரும் சோலைமலையென்று வழங்கப்பட்டது என்றும் அறிய இடமுண்டு. சோலைகளாற் சூழப்பட்ட மலைகளில் மற்றொன்று இருஞ்சோலைமலைக்கு அருகில் இருந்துகொண்டு இற்றைக்கும் சிறுமலை என்று வழங்கப்பெறுவதே இதற்குத் தக்கசான்றாம். இச்சோலைமலையே இருஞ்சோலைமலை என்றும், திருமாலினுடைய இருஞ்சோலைமலையாதலின், திருமாலிருஞ்சோலைமலையென்றும் வழங்கப்பெறுவதுபோலவே, பழங்கள் முற்றியிருப்பதாற் பழமுதிர்சோலைமலையென்றும் அக்காலத்தில் வழங்கப்பட்டது என்று அறிக.

இவற்றாலெல்லாம், நக்கீரர், பழமுதிர்சோலைமலை என்றது திருமாலிருஞ்சோலைமலையையே என்பது தெளிவாம். அங்ஙனமாயின், பாண்டிநாட்டின் மற்றத்தலங்களுடன்கூறாது சோலைமலையை ஈற்றில் வைத்தது என்னையெனின், முதலிற்கூறிய பரங்குன்று பரமசிவன் சம்பந்தம்பெற்று முருகக்கடவுட்கு உரியதாயவாறுபோலவே இது திருமால் சம்பந்தம்பெற்று முருகனுக்கு உரியதாயிற்று என்க. அக்காரணம் பற்றியே இதனை ஈற்றில்வைக்கநேர்ந்ததும் என்றுணர்க.

பரங்குன்றையும் சோலைமலையையும் முதலினும் முடிவினும் வைத்ததற்கேற்ப மற்றைத்தலங்களில் முருகக்கடவுளைப் பற்றிக்கூறியது போலன்றி இந்த இரண்டுதலங்களைமாத்திரம் தலத்தின்வளந்தோன்றப் பாடியுள்ளதும் ஈண்டு அறியத்தக்கது.

இனி அத்தலங்களை நக்கீரர் எவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளார் என்று காண்பாம்:—

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரியன்"

என்று பரங்குன்றைக் கூறியுள்ளார். அதற்கு, "போரைவென்றுவிரும்பிக் கட்டின சேய்நிலத்தேசென்றுயர்ந்த நெடியகொடிக்கருகே நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையிற் றூங் கிபேவிடும்படி பெறுவாரை இல்லையாக்குகையினாலே எக்காலமும் போர்த் தொழிலரிதாகிய வாயிலினையும் திருமகள் வருத்தமின்றியிருந்த குற்றந் தீர்ந்த அங்கடித்தெருவினையும் மாடங்கள்மலிந்த ஏனைத்தெருக்களையு முடைய மதுரையின் மேற்றிசையிடத்து அழகினையுடைத்தாகிய சிறகையுடைய வண்டினுடைய அழகியதிரள் கரியசேற்றினையுடைய அகன்றவாயிலிலே முறுக்குநெகிழ்ந்த பின்பு தாதும் அல்லியும் தோன்ற மலர்ந்த முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்பூவிலே இராப் பொழுது துயில்கொண்டு விடியற்காலத்தே தேன் நாறுகின்ற நெய்தற் பூவையூதி ஞாயிறுதோன்றினகாலத்தே கண்ணையொக்கவிரிந்த விருப்ப மருவின சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்கும் திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந்திருத்தலுமுரியன்" என்பது பொருளாம்.

இவ்வடிகளில், நக்கீரர், தம்நகர்மீதுள்ள பற்றினால் முதலில் மதுரை யின் வளங்களைக்கூறிப் பின்னர்ப் பரங்குன்றின்வளங்களைக் கூறுகின்றார். பரங்குன்றைக்கூறுமிடத்து ஆசிரியர் பெரும்பாலும் மருதவளத்தாற் கூறுவதால் அது மருதநிலத்தூராம். பரங்குன்றைக்கூறுமிடத்து "மறு வில் கற்பின் வாணுதல் கணவன்" என்பதாற் பரங்கிரியில், தெய்வயானை திருமணத்தைக் குறித்தாராயிற்று.

திருச்சீரலைவாயை, "வைந்நுதிபொருத வடுவாழ் வரிநுதல்" என் னும் அடிமுதல் "உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்—அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பு" என்னும் அடிகள்முடியக் கூறியுள்ளார்.

இதன்பொருள்:—"கூர்மையையுடைத்தாகிய தோட்டிவெட்டின வடு வழுந்தின புகரையுடைய மத்தகத்தே பொன்னரிமாலை பட்டத்தோடே

இடந்து அசையத் தாழ்கின்றமணி மாறி ஒலிக்கின்ற பக்கத்தினையும் கடியநடையினையும் கூற்றுவனையொத்த பிறரால் தடுத்தற்கரியவலி யினையுமுடைய ஓடுங்காற் காற்றெழுந்தாலொத்த களிற்றை ஏறி, ஐந் தாகிய வேறுபட்ட வடிவினையுடைய முடிக்குச்செய்புந்தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற முடியோடேகூடி விளங்கிய ஒன்றற்கொன்று மாறுபாடு மிகும் அழகினையுடைய மணி மின்னோடேமாறுபடுகின்ற விளக்கத் தோடே முடியிலே பொலிவுபெற, ஒளிதங்கியசையுந் தொழிற்கூறமைந்த பொன்னாற்செய்த மகரக்குழை சேய்நிலத்தேசென்றுவிளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய மதியைச்சூழ்ந்துநீங்காத மீன்கள் போல விளங்குவனவாய் ஒளியைக் கால, வருத்தமில்லாத விரதங்களை யுடைய தவத்தொழிலைமுடிப்பாருடையமனத்திலே பொருந்தித்தோன்று கின்ற ஒளி நிறம் இவற்றையுடைய முகங்களிலே ஒருமுகம் பெரு மையையுடைத்தாகிய இருட்சியையுடைய உலகம் குற்றமின்றாய்விளங் கும்படி பல கிரணங்களையும் தோற்றுவித்தது; ஒருமுகம் தன்மேல் அன்பு செய்தவர்கள் துதிக்க அதற்குப்பொருந்தி அவர்க்கினிதாக நடந்து அவர்மேற்சென்றகாதலாலே மகிழ்ந்து வேண்டும்பொருள்களை முடித்துக் கொடுத்தது; ஒருமுகம், மந்திரத்தையுடைய வேதத்திற்கூறிய முறைமை யிடத்துத் தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்குவாராதபடி நினையாநிற்கும்; ஒருமுகம் ஈண்டுவழங்காத வேதங்களினும் நூல்களினு முள்ளபொருள்களை யாராய்ந்து இருடிகள் ஏமுறும்படி உணர்த்தித் திங்கள்போலத் திசைகளெல்லாம் விளக்குவிக்கும்; ஒருமுகம் திருவுள் ளத்துச்செல்கின்ற நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்ல வேண்டும் என்று கறுவுதல்கொண்ட திருவுளத்தோடே செறப்படும் அசுரர் முதலியோரைப் பொன்றக் கெடுத்துக் களவேள்வியைவேட்டது; ஒருமுகம் குறவருடைய மடப்பத்தையுடையமகளாகிய வல்லிபோலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று: அவ் வாறுமுகமும் அத்தொழில்களிடத்துச்செய்யும் முறைமைகளைப் பயின்று நடத்துகையினாலே அம்முகங்களுக்குப் பொருந்தப் பொன்னாற் செய்த ஆரந்தங்கிய அழகையுடைத்தாகிய பெருமையையுடைய மார்பிற் கிடக்கின்ற உத்தமவிலக்கணமாகிய சிவந்த மூன்றுவரியினையும் தன் னிடத்தேவந்துவிழும்படி வாங்கிக்கொண்டவும், தம்முடையவலியினாலே பெரிய புகழ்நிறையப்பட்டுச் சுடரையுடைய படைக்கலங்களையெறிந்து

பகைவர்மார்பைப்பிளந்து அவற்றை வாங்கியதுமான நிமிர்தோள்களில் ஒருகை எக்காலமும் ஆகாயத்தே இயங்குதன்முறைமையினையுடைய தெய்வ இருடியர்களுக்குப் பாதுகாவலாக எடுத்தது. ஏந்தியகைக்கு இணைந்தகை மருங்கிலேவைத்தது. ஒருகை தோட்டியைச் செலுத்தா நிற்க மற்றைக்கை செம்மைநிறம்பெற்ற ஆடையையுடைத்தாகிய துடையின்மேலே கிடந்தது. இரண்டுகைகள் வியப்பையும் கருமையையுமுடைய பரிசையுடனே வேலையும் வலமாகச் சுழற்ற, முனிவர்க்குத் தத்துவங்களைக்கூறி உரைபிறந்தபொருளையுணர்த்துங்காலத்து ஒருகை மார்போடே விளங்காநிற்க, ஒருகை மார்பின் மாலைதாழ்ந்ததனோடே சேர்ந்து அழகுபெற, ஒருகை தொடியோடு மேலேசுழன்று களவேள்விக்கு முத்திரைகொடுப்பக் கீழேவீழ்ந்தமற்றைக்கை ஓசையினிதாகிய ஒலிக்கின்ற மணியை மாறியொலிக்கப்பண்ண, ஒருகை நீலநிறத்தையுடையமேகத்தாலே மிக்கமழையைப் பெய்வியாநிற்க, ஒருகை தெய்வமகளிர்க்கு மணமாலைசூட்ட, அப்படியே அந்தப் பன்னிரண்டுகையும் முகத்தின்பகுதியிலேபடும்படி தொழில்செய்து ஆகாயத்தினது துந்துமியொலிப்பத் திண்ணியவைரத்தையுடைய கொம்பு மிக்கொலிப்ப வெள்ளியசங்கு முழங்க வலியைத் தன்னிடத்தேகொண்ட உருமேற்றினது இடிப்புப்போலும் ஓசையையுடைய முரசுடனே பலபீலியையுடைய மயில் அவனாணையினாலேவென்றெடுத்த கொடியிலேயிருந்து ஒலியாநிற்க, ஆகாயமேவழியாக விரைந்தசெலவினைமேற்கொண்டு நன்மையோங்கும் நன்மக்கள்புகழ்ந்த உயரும் சீரினையுடைய புகழினையுடைய நாமனூரலைவாய் என்னும் திருப்பதியேற எழுந்தருளுதலும் அவற்கு நிலைபெற்ற குணம்" என்பதாம். இவ்வடிகளிற் சீரலைவாயில் எழுந்தருளியுள்ள குமரக்கடவுளின்றிருவுருவம் நன்குபுகழப்பட்டிருத்தல் அன்பர்களின் மனத்தை யபகரிக்கும் என்பதிற் றடையிராது. இவ்விடத்து, ஆறுதிருமுகங்களும் பன்னிருதிருக்கைகளும் பாங்காகப் புகழ்ந்துகூறப்பட்டுள்ளன.

இனி, ஆவிநன்குடியைச் "சீரை தைஇய உடுக்கையர்," என்பது முதலாகச் "சின்னாள்-ஆவி நன்குடி யசைதலு முரியன்" என்பது வரையிலும் கூறியிருக்கின்றார். இதன்பொருள்:—"பலரும் புகழ்கின்ற அயன் அரி அரன் என்னும் மூவரும் தத்தமக்குரிய தொழில்களை முன்புபோல் நிகழ்த்தித் தலைவராகவேண்டிப் பிள்ளையார்சபித்தலாலே

மண்ணிடத்தேதோன்றி மயக்கமுறுகின்ற நான்குமுகத்தையுடைய, திருமாலுடைய திருவுந்தித்தாமரைபெற்ற, ஊழிகடோறும் தன் படைத்தற்றொழிலில் வருத்தமில்லாத ஒருவனாகிய அயனைப் பழையநிலையிலே நிறுத்தக்கருதி நான்காகிய பெரிய தெய்வத்தையுடைய நன்றாகிய ஊர்கள் நிலைபெற்ற உலகத்தைக்காக்கும் ஒரு தொழிலையேவிரும்பியகோட்பாட்டையுடைய நஞ்சுடனே உறைக்குள்ளேகிடந்த துளையினையுடைய வெள்ளிய எயிற்றினையும், நெருப்பென்னும்படி நெட்டுயிர்ப்புக்கொள்ளுப கண்டார்க்கு அச்சந்தோன்றும் கடியவலியினையு முடைய பாம்பு படும்படியடிக்கும் பலவரியினையுடைத்தாகிய வளைந்தசிறகினையுடைய கருடனையணிந்த நீண்டகொடியினையுடைய திருமாலும், வெற்றிக்களத்தே வெள்ளிய ஏற்றினை வெற்றிக்கொடியாக எடுத்தவனும் இறைவியொருபாகத்தேபொருந்தி விளக்குமவனும் பலரும் புகழ்கின்ற சிக்கென்ற தோளினையும் இதழ்குவியாத மூன்றுகண்ணினையுமுடையவனும் முப்புரத்தை யெரித்த மாறுபாடுமிக்க செல்வனுமாகிய உருத்திரனும், ஆயிரம் கண்ணினையும் பலவேள்விகளை வேட்டுமுடித்ததனாற்பெற்ற பகைவரைவென்று சொல்கின்ற வெற்றியினையும் உடைய தலைகள் ஏந்தியிருக்கின்ற நான்காகிய கொம்பினையும் அழகிய நடையினையும் நிலத்தேகிடக்கின்ற பெரிய வளைந்த கையினையுமுடைய எல்லாரு முயர்த்துச் சொல்லப்படுகின்ற யானையின்கழுத்திலே ஏறிய திருமகள்விளங்கு மிந்திரனும், தம்முள் மாறுபாடில்லாத அறிவினையுடைய நான்காகிய வேறுபட்ட இயல்பினையுடைய முப்பத்துமூவரும், பதினெண்வகையாகிய உயர்ந்தநிலையைப் பெற்றவரும் ஆகிய இவர்கள் உடுக்கள் பொலிவு பெற்றுத் தோன்றினாலொத்த தோற்றத்தையுடையராய் மீன்கள் உலாவுகின்ற இடத்தே சேர்ந்து காற்று எழுந்தாலொத்த செலவினையுடையராய்க் காற்றிடத்தே நெருப்பெழுந்தாலொத்த வலியினையுடையராய் நெருப்புப்பிறக்க உருமேறு இடித்தாற்போன்ற குரலினையுடையராய் ஆகாயத்தே சுழற்சியினையுடையராய்த் தம்முடைய சீரிய படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் தொழில்களைப் பண்டுபோலப் பெறுமுறைமையினைக் குறைவேண்டிநின்றுபெறுங்கூற்றாலே முடித்துக்கோடற்குப் புகையைமுகந்தாலொத்த தெய்வத்தன்மையால் அழுக்கேறாத தூயவுடையினையும் முகை வாய்நெகிழ்ந்த மாலைசூழ்ந்த மார்பினையும் உடைய செவியாலே சுருதியையளந்து நரம்பைக்கட்டின சுற்றுதலுறும் வார்க்

கட்டினையுடைய நன்றாகிய யாழினிசையிலேபயின்ற ஈரமுடைய நெஞ்சாலே எக்காலமும் மெல்லியவார்த்தைசொல்லுதலைப்பொருந்திய கந்தருவர் மக்களுக்குரிய நோயில்லையாக நிருமித்த உடம்பினையுடையராய் மாவினது விளங்குகின்ற தளிரையொக்கும் நிறத்தினையுடையதாய் விளங்குந்தோறும் பொன்னுரைவிளங்கினாற்போலும் திதலையையுடையராய்க் கட்கினிய ஒளியினையுடைய பதினெண்கோவையாகிய மேகலையணிந்த தாழவேண்டிய இடம் தாழ்ந்து உயரவேண்டிய இடம் உயர்ந்த அல்குலையுடைய குற்றமில்லாத கந்தருவமகளிரோடே குற்றமின்றாய் விளங்காநிற்க இனிய நரம்பை வாசிக்க மாவுரியை யுடையாகச்செய்த உடையினையுடையர் அழகோடு வடிவாலும் நிறத்தாலும் வலம்புரிச்சங்கினையொக்கும் நரைமுடியினையுடையர்; எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கறவிளங்கும் வடிவினையுடையர், கிருட்டிணாசினம்போர்த்த விரதங்களால் விட்டபட்டினியால் தசைகெடுகின்ற மார்பின் எலும்புகள் கோவைதோன்றியுலவும் எலும்பினையுடையர்; மாறுபாட்டோடே நெடுங்காலம் நிற்கும் செற்றத்தினையும் போக்கிய மனத்தினையுடையர்; பலவற்றையும் கற்றோர் சிறிதுமறியப்படாத இயல்பான அறிவினையுடையர்; பலவற்றையும் கற்றோர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையையுடையர்; ஆசையோடே கடியசினத்தையும் போக்கின அறிவினையுடையர்; தவத்தான் மெய்வருத்தமுளவேனும் மனத்தான் வருத்தம் சிறிது மறியப்படாத இயல்பினையுடையர்; ஒருவருடனும் வெறுப்பில்லாத நல்லவறிவினையுடைய முனிவர் திருவுள்ளம் பொருந்துதல்வர முன்னேசெல்ல யாவரும் சேரவந்து காணும்படியாக வருத்தமில்லாத அருட்கற்பினையுடைய தெய்வயானையாருடன் ஆவிநன்குடியென்னும் ஊரிற் சிலநாள் இருத்தலும் உரியன்" என்பதாம். இவ்வாவிநன்குடி என்னும் ஊரில் முருகக்கடவுள் திருவோலக்கமும் அதிற் கந்தருவர் யாழ்வாசித்தலும் முனிவர்வருகையும் அயன்சாபத்தையொழித்து நல்வழிப்படுத்த வேண்டி மும்மூர்த்திகள்வந்து குறையிரத்தலும் முதலியன கூறப்பட்டுள்ளன. இவ்வடிகளில் முனிவரைப்பற்றிக் கூறியிருப்பது அறிஞரறிந்து வியக்கத்தக்கதாம்.

திருவேரகத்தை, "இருமூன்று எய்திய இயல்பினின்வழாஅ"— என்பதுமுதற் "பெரிதுவந்து, ஏரகத்துறைதலு முரியன்" என்பது வரையுமுள்ள அடிகளிற் கூறியுள்ளார். அவ்வடிகளின்பொருள், "ஓதல்

ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறுகிய நன்மைபொருந்திய இலக்கணத்தில் வழுவாமல் தாயும் தந்தையுமாகிய இருவர்குலத்தையும் உலகத்தார் நன்றென்று பலவாய் வேறுபட்ட பழையகுடியிற்பிறந்த நாற்பத்தெட்டியாண்டு நல்லிளமையை வேதம் கூறிய நெறியிலேபோக்கிய அறத்தை எப்பொழுதும் கூறுகின்ற கோட்பாட்டினையும் நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவுமாகிய மூன்று வகையான ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று தீயானுண்டாகிய செல்வத்தினையும் ஒன்பதாகியநூலைத் தன்னிடத்தே கொண்ட ஒருபுரி மூன்றாகிய நுண்ணிய பூணூலையும் உடைய இருபிறப்பாளர் தாங்கள் நீராடுங்கால் தோய்க்கப்பட்ட கலிங்கம் உடம்பிலே கிடந்துபுலர உடுத்து மணமிக்க நறியபூவை பெடுத்துத் தலைமேலே வைத்த கையினையுடையராய் ஆறெழுத்தினைத் தன்னிடத்தே யடக்கியிருக்கின்ற கேட்டற்கரிய மறையவுச்சரிக்கப்படும் மந்திரத்தை நாப்புடைபெயருமளவிலே பயில உச்சரித்து வழிபடுங்காலமறிந்து தோத்திரங்களைக்கூறப் பெரிது மகிழ்ந்து ஏரகம் என்கின்ற ஊரிலே இருத்தலுமுரியன்" என்பதாம் இவ்விடத்தில் அந்தணர்தன்மையும் பிரமசரிய விரதமும் அதனைக்காக்கவேண்டிய எல்லையும் அந்தணர் குமரக்கடவுளை வழிபடுமுறையும் வழிபடும்பொழுதும் நாப்புடைபெயரும் (உச்சரிக்கும்) மந்திரமும் ஆகியவை நன்குகூறப்பட்டுள்ளன. நக்கீரர் அந்தணரல்லரென்றுகூறுவார் இவ்வடிகளை நன்கு ஊன்றிப்பார்ப்பாராக.

இனிக் குன்றுதோறாடலைப் "பைங்கொடிநறைக்காய்" என்பதுமுதற் "குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே" என்பதுவரையினுமுள்ள அடிகளாற் குறித்துள்ளார். "கானவர்கள் குரல்வபயர மெல்லிய தோளினையுடைய மான்பிணைபோலும் மகளிர் குரவையாடியசைய, செய்யன் வேலன் நறியசந்தனத்தைப்பூசிய நிறம்விளங்குமார்பிலே காட்டுமல்லிகையுடனே வெண்டாளியையுங்கட்டின கண்ணியையுடையனாய்க் கச்சைகட்டிக் கழலையணிந்து வெட்சிமாலையைச்சூடிக் குழலையூதிக் கொம்பைக்குறித்துச் சிறியபல்லியங்களை எழுப்பி மயிலை ஏறிக் கோழிக் கொடியை யுயர்த்துத் தானவேண்டியவடிவுகொடலிற் பிள்ளையாயிராது நெடுகவளர்ந்து தோளிலே தொடியையணிந்து நரம்பு ஆரவாரித்தாலொத்த இனியமிடற்றையுடைய பாடுமகளிரோடே மலைகடோறுஞ் சென்று தன்னுடைய முழவையொத்த பெருமையையுடையகையினாலே

அவர்கள் கையினைத்தழுவி எடுத்துக்கொண்டு விளையாடுதலும் முருகனுக்கு நிலைபெற்றகுணம்" என்பது, அவ்வடிகட்குப் போந்தபொருளாம். இவ்விடத்திற் குறிஞ்சிவளங்கள்சிலவும் கானவர் தம்மகளிரோடு குரவையயர்தலும் அக்குரவைக்கூத்தில் வேல்முருகன் தோன்றிச் சிலமகளிர்களுடன் மலைகளில்நின்று குரவைக்கூத்தாடுதலும் கூறப்பட்டுள்ளன.

பழமுதிர்சோலைமலையைப் "பலவுடன், வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்து" என்பது முதல் "பழமுதிர்சோலைமலைகிழவோனே" என்பதுவரையும் குறிஞ்சிவளம் நன்குதோன்றக்கூறியிருக்கின்றார். "வேறுபட்ட பலவாகிய துகிற்கொடிகளைப்போலத் தாம் பலவும் கூடவசைந்து அகிலைமேற்கொண்டு சந்தனமாகிய பெரியமரத்தைத் தள்ளிச் சிறுமூங்கிலினது பூவையுடைய அசைகின்றகொம்பு தனிப்ப வேரைப்பிளந்து தேவருலகத்தைத் தீண்டுகின்ற நெடியமலைபிடத்தே ஞாயிற்றின்மண்டலத்தைப்போல ஈவைக்கப்பட்ட தண்ணியவாய் மணக்கின்ற விரிந்த தேன்கூடுகெட நன்றாகிய பல ஆசினி (பலா) களினுடைய முற்றியசுளை தன்னிடத்தேகலக்க மலையினுச்சியிலேயுண்டான சுரபுன்னையின நறிய மலர்கள் உதிரக் கருங்குரங்கோடே கரியமுகத்தையுடைய முசுக்கலைகளும் நடுங்கப் புகரையணிந்த மத்தகத்தையுடைய பெரியபிடி குளிரும்படி வீசிப் பெரியயானையினுடையமுத்தையுடைத்தாகிய வெள்ளிய கொம்புகளையுள்ளடக்கி நல்ல பொனனும் மணியும் நிறம்விளங்கும்படி மேலேகொண்டு குதித்துத் தத்துதலையுற்றுப் பொடியான பொன்னைத் தெள்ளி வாழையினது பெரியமுதல் துணியத் தெங்கினது இளநீரையுடைய சீரிய தலையுதிர அவ்விரண்டினையும் மோதி மிளகினது கொடியின் கரியகொத்துக்கள் சாயப் பீலியையுடைத்தாகிய இடத்தினையும் மடப்பத்தையுடைத்தாகிய ஒழுக்கத்தினையுமுடைய மயில்களோடே கோழியினுடைய வலியையுடையபெடை வெருவிப் பலவும்சேரக்கெட ஆண்பன்றியுடனே உள்ளே வெளிற்றினையுடைத்தாகிய கரிய பனையினது புல்லிய செறும்பையொத்த கரியநிறத்தையுடைத்தாகிய மயிரினையுடைய உடம்பினையும் வளைந்த அடியினையுமுடைய கரடி பெரிய கல்விண்ட முழைஞ்சிலே சேரக் கரிய கொம்பினையுடைய ஆமாவினுடைய நன்றாகிய ஏறுகள் முழங்க மலையின் உச்சியினின்றும் இழுமென்னும் ஓசைபடக்குதிக்கும் அருவியையுடைய பழம்முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரிமையையுடையோன்" என்பது அவ்வடிகளின் பொருளாம். இவ்வடிகளில்

மலையின்து இயற்கைவளனையும் அருளியாயும் அழகையும் எளிய இனிய நடையில் மாட்டிலக்கணமென்பது சிறிதுமில்லாமற் குறிஞ்சித்திணையை வருணித்திருப்பது கற்றோர்மனனைக் கவருமென்பது எனது கருத்து.

இனி, ஆற்றுப்படைக்குத் தோற்றுவாய்செய்தவிடத்து மறுவில் கற்பின்வாணுதல் கணவன், தண்டார்புரளும்மார்பினன், காந்தட்கண்ணி மிலைந்தசென்னியன், எய்யாநல்லிசைச்செவ்வேற்சேய் நீ அவனது சேவடி படரும் செம்மலுள்ளமொடு செலவுநயந்தனையாயின், இன்னேபெறுதி முன்னியவினையே என்று தலைக்கூட்டிப் பின்னர், அவன் எழுந்தருளி யுள்ள தலங்களைக்கூறி அத்தலங்களிலும் பிறவிடங்களிலும் அவன் எழுந்தருளியிருப்பான். நீ அவ்விடங்களில் அவனைக்கண்டுழி முக னமர்ந்து ஏத்தி அறுவர்பயந்த ஆறமர்செல்வ ஆல்கெழுகடவுட்புதல்வ மலைமகள்மகனே மாற்றோர்கூற்றே கொற்றவைசிறுவ பழையோள்குழவி வானோர்வணங்குவிற்றானைத்தலைவ மாலைமார்ப நூலறிபுலவ செருவி லொருவ பெருவிறன்மள்ள அந்தணர்வெறுக்கை அறிந்தோர்சொன்மலை மங்கையர்கணவ மைந்தரேறே வேல்கெழுதடக்கைச்செல்வ குறிஞ்சிக் கிழவ நன்மொழிப்புலவரேறே பெரும்பெயர்முருக நசையுநர்க்கார்த்தும் இசைபேராள அலந்தோர்க்களிக்கும்சேய் பரிசிலர்த்தாங்கும்நெடுவேள் போர்மிகுபொருந எனப் பல ஆறுதி ஏத்திக் குறித்துமொழியா அளவை யின் மலைகிழவோனுகிய குரிசிலும் தெய்வஞ்சான்ற திறல்விளங்குருவின் வான்றோய்நிவப்பில் தான்வந்தெய்தித் தெய்வத்தினநலங்காட்டி அஞ்சல் ஒப்புமதி அறிவல் நின்வரவு என அன்புடை நன்மொழிகூறி இவ்வுலகத் தில் ஒருநீயாகத்தோன்றப் பெறலருபரிசில் நல்குவன் என்று கடைக் கூட்டி ஆற்றுப்படுத்தவாறுகாண்க.

நல்குவன் எனப் பயனிலை முன்னும், 'பழமுதிர்சோலைமலைகிழ வோன்' என எழுவாய் பின்னும்வர வினைமுற்றுத்தொடராகப் புலவர் இப்பாட்டினைச் செய்திருக்கின்றார் என்பது உரைசெய்த நச்சினார்க்கினி யர்கருத்தென்பதனை அவர் ஈற்றில் முடித்துக்காட்டியிருப்பதா லறிய லாம். இங்ஙனம் செய்யுள்செய்வதே சிறப்பென்பது அக்காலத்துப் புலவர் கருத்தாம். இன்னும் மற்றுமுள்ள ஆற்றுப்படைகளிலும் எழு வாயே ஈற்றில் நிற்பது காண்க. இப்பாட்டைச்செய்த புலவர் நக்கீரர், தாமியற்றிய நெடுநல்வாடையென்னும் மற்றொருபாட்டின்கண்ணும் எழு வாயை ஈற்றில் வைத்திருப்பது இங்கு அறியத்தக்கது.

இப்பாட்டில் ஆற்றுப்படுத்தவன் பெற்றபெருவளத்தினையுடையவன்; அவனை "யானறியளவையின் ஏத்தி" என்னுமிடத்திலுள்ள "யான்" என்னும் சொல்லாற் குறித்துள்ளார். ஆற்றுப்படுக்கப்பட்டவன் "முதுவாயிரவல" "நீ" என்பனவற்றாற் கூறப்பட்டுள்ளான்.

இனி இவ்வாற்றுப்படையுள் வீடுபெற்றான் ஒருவன் அதுபெறுதானை நோக்கி நீ வீடுபேறு கருதினையாயின் முருகனிடத்துச்செல்க என்றனன்; பெறுதான் அம்முருகன் எங்கெழுந்தருளியிருக்கும் என்று வினவப் பரங்குன்றிலுள்ளான என்றனன. ஆயின், அவன் இயல் என்னை என்று கடாயினன்; அதற்கு ஆறுமுகம் பன்னிருகை முதலியவற்றையுடையான் செந்திலான் என்றான. அப்பொழுது இரவலன் வீடருளுந் தன்மையுடையனோ முருகன் என் றையுற்றான். நீ ஐயுறேல்; அவன் முத்தேவர்க்கும் அருள் செய்து அவர் தொழிலை நிலைநிறுத்தினவன்; முப்பத்துமூவரும் பதினெண்கணங்களும் தன்னைவழிபட நின்றான் ஆவினன்குடியில் என்றான். அங்ஙனமாயின், அவனை வழிபடுமாறு எங்ஙனே? வழிபடும் மந்திரம் எது? என்றுசாவினன்; அதற்கு ஏரகத்தில் அந்தணர்வழிபடுமாற்றையும் அவர்கள் உச்சரிக்கும் மந்திரமாகிய ஆறெழுத்தினையும் உபதேசித்தான். அப்பொழுது அத்தகையோனை மேலேகூறிய இடங்களிற்சென்றுதான் காணவேண்டுமோ என்று ஏக்கமுற்றான்; அதனைக்கண்டு வீடுபெற்றான் அன்பனே! நீ ஏக்கமடையற்க; என்னாற்கூறப்பட்டவன் முற்கூறிய இடங்களின்மட்டுமன்று; சீர்கெழு விழவு மேவருநிலை வெறியயர்களன் காடு கா கவின்பெறுதுருத்தி கந்துடைநிலை முதலிய இன்னும் பல இடங்களில் நீ எங்கெங்குக் காணவேண்டுமென்று விரும்புகின்றனையோ ஆண்டாண்டுக் காணப்படுவன் என்று தேற்றினான். தேற்றத்தேறிய இரவலன் என்னே நீ கூறியது; உன்னாற் கூறப்பட்டவன் ஆறுமுகமும் பன்னிருகையுமுடையவனன்றோ? அவன் அருள்செய்வது முத்தேவர்களுக்கன்றோ? அவனைச் சூழ்ந்திருப்பார் தேவர்களும் முனிவர்களுமன்றோ? அவனைப் போற்றிவழிபடுவார் அருமறையந்தத்தைச் சிந்தைசெய் யந்தணரன்றோ? அவர்கட்கன்றோ அவ்வாறெழுத்தும் சொல்லியமுறையாற் சொல்லுதற்கெளிது? எம்மனோர்க் கெளிவரும் நிலைமையனோ அவன் என்று ஆர்வமுற்றான். அக்காலை வீடுபெற்றான் ஆர்வலனது தீவிரமான பக்குவதசைகண்டு அவனை விளித்து நீ அங்ஙனம் கருதற்க. நீ கூறவேண்டுவது

ஆறெழுத்தன்று; மகனே கூற்றே குழவியே மைந்தரேறே புலவரேறே என்று உனக்குத் தோன்றிய சொற்களால் ஏத்தலாம். அவனைச் சேவித்திருப்பார் தேவராயினும் யாவராயினும் அவர்கள் நீ வந்ததை முருகனிடத்து விண்ணப்பஞ்செய்யுந் தன்மையுள்ளவர்கள்; தேவர்க்கு மட்டும் அருள்செய்பவனன்று; அவன் பரிசிலர்த்தாங்கும் உருகெழு நெடுவேளாம். அவன் உருவத்தைக்கண்டு அச்சங் கொள்ளற்க. உனக்குக் காட்சிதரும்பொழுது வருத்தமமைந்த தனது தெய்வத்தன்மையை உள்ளடக்கிக்கொண்டு தன் இளைய வடிவுடன் வந்துதோன்றுவன். உன்னைக் கண்டவுடன் நீ உன் குறையைக்கூறவேண்டாதே தானே அன்புடை நன்மொழியளைஇ அஞ்சலோம்பு மதி அறிவல்நின்வரவு என்று கூறி அருள்செய்யும் எளிவரும் நிலையினன்; நீ அவனிடத்துச்செல்க என்று அவன்கூறியவற்றிற்குத்தக முறையே விடையிறுத்து ஆற்றுப்படுத்தியவாறு அருமையினும் அருமையாம்.

இனி இவ்வாற்றுப்படையின் உள்ளுறைபொருளாவது:—சனகர் முதலிய முனிவர்நால்வரும் மாணிக்கவாசகரும் முத்திநிலையை அடைவதற்கு மெய்ம்மையானதேசிகனை விரும்பினரன்றே? அங்ஙனம் அவர்கள் தாம் விரும்பியவாறே தேசிகனைப்பெற்று அம்முத்திநிலையினையுள்ளவாறறிந்தனரன்றே? அவர்க்குத் தேசிகனாய்ப் பரமசிவன் தானே விரும்பியமர்ந்து அவர்களை ஆட்கொண்டனர். அங்ஙனமே உபதேசமொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற்கேட்டு அதனால் மெய்ப்பொருளையுணரவேண்டு மென்பது கட்டளையாதலின் நக்கீரரும் இவ்வுலகத்திடத்துக்கொண்ட மேலான அருளினால் மக்களை நல்வழிப்படுத்துவதற்கு அவர்கள் தம்மை விரும்பாமலிருக்கையிலேயே தாமே வலிய அவர்கள்குழுவிற்புகுந்து அவர்கட்குத் தாம் தேசிகராகவமர்ந்து அவர்களிடத்து முருகனது இட முதலியவற்றையும் அவனிடத்துத் தாம் பெற்ற அருளையும் கூறி மக்களைத் தம்வயப்படச்செய்து அவர்களையும் முருகனைவழிபடக் கூறியருளினர் என்பதேயாம்.

வீட்டுநெறி என்பது ஈண்டுவாராநெறியன்றே? அங்ஙனமாக வீடுபெற்றானொருவன் இவ்விடத்து மக்களிவரை ஆற்றுப்படுப்பதெங்ஙனங்கூடும்? என்னும் தடையுண்டாகலாம்; அதற்கு இங்கு வீடுபெற்றான் என்றுகுறித்தது ஜீவன்முத்தனையாம். உள்ளுறைபொருளினும்

நக்கீரரும் சாவவும் வாழவும் பாடும்படி கடவுளருள்பெற்றாராதலின் ஜீவன்முக்தரென்றே கருதலாம்.

இவ்வாற்றுப்படையுள், முதலிற் சிவபிரான் தலமும், ஈற்றில் திருமால் திருப்பதியுங்கூறி, நடுவில் அபனுக்கு அருள்செய்தமை கூறியிருக்கின்றார்.

இனி இவ்வாற்றுப்படையுள், மக்களாவார்க்கு உறுதிபயப்பனவாகிய நால்வகைப்பொருளும் நால்வகைநிலையும் நன்குற வமைந்துகிடக்கின்றன. "ஒருமுகம் குறவர்மடமகள் கொடிபோனுசுப்பின்—மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே" 'இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தது உலகிலில்வாழ்க்கைநடத்தற்கென்றுணர்க' என்பதனாலும், 'சீரைதைஇய வுடுக்கையர்.......துனியில்காட்சி முனிவர்' என்பதனாலும் முறையே இல்லறமும் துறவறமும் கூறினார். இதனால் அறம் கூறப்பட்டவாறு காண்க. இல்லறமும் துறவறமும் அறங்களுட் டலையாய அறங்களாம்; பலர்புகழ்மூவரும் தலைவராகப் புள்ளணிநீள்கொடிச் செல்வனும் யானையெருத்தம் ஏறிய திருக்கிளர்செல்வனும் மூவெயின்முருக்கிய முரண்மிகு செல்வனும் முதலியவர் தன்னைவந்துகாணத் தான் ஆவினன்குடியசைதலு முரியன் என்று அரசியல் கூறியமையாற் பொருளும், "மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு..........மென்றோட் பல்பிணை தழீஇத் தலைதந்து—குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே" என்று மலைகடோறும் சென்று மகளிரோடு குரவையாடுதல் கூறியவதனால் இன்பமும், "புலம்புரிந்துறையுஞ்சேவடி" என்று கந்தழி கூறியவதனால் வீடும் கூறினாராயிற்று.

இனி "இருமூன்றெய்திய இயல்பினின்வழாஅ.......முத்தீச்செல்வத்திருபிறப்பாளர்" என்பதனால், பிரமசரியமும், "ஒருமுகம் குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் - மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே" என்பதனால் மனையறமும் "சீரை தைஇய உடுக்கையர்.......... துனியில் காட்சி முனிவர்" என்பதனால் துறவறமும் கூறினாராயிற்று; வானப்பிரத்தம் துறவறத்திற்கு ஆறு ஆதலின் துறவறங்கூறியவதனால் அதுவும் கூறியதாகவே யமையும்.

## ஆற்றுப்படையுள் வந்துள்ள கதைகள்.

### (1) அயன்சாபம்.

பிள்ளையார் அசுரரையழித்துத் தேவரைக்காத்ததற்கு இந்திரன் மகள் தெய்வயானையாரை அவர்க்குக் கொடுத்தவிடத்தே பிள்ளையார் தங்கையில் வேலைநோக்கி நமக்கு எல்லாந்தந்தது இவ்வேல் என்ன, அருகிருந்த அயன் இவ்வேலிற்கு இந்நிலை என்னால்வந்ததன்றோ என்றானாக நங்கையில்வேலுக்கு நீகொடுப்பதொரு சத்தியுண்டோவென்றுகோபித்து இங்ஙனங்கூறியநீ மண்ணிடைச்செல்வாய் என்று சபித்தனர்.

### (2) முருகன்பிறப்பு.

இறைவன் உமையை வதுவைசெய்துகொண்டநாளிலே இந்திரன்சென்று நீ புணர்ச்சிதவிரவேண்டும் என்று வேண்டிக்கொள்ள அவனும் அதற்குடம்பட்டு அது தப்பாமைப் புணர்ச்சிதவிர்ந்து கருப்பத்தை இந்திரன்கையிற்கொடுப்ப அதனை இருடிகளுணர்ந்து அவன் பக்கல்நின்றும்வாங்கித் தமக்குத் தரித்தல் அரிதாகையினாலே இறைவன்கூறாகிய முத்தீக்கட்பெய்து அதனைத் தம் மனைவியர் கையிற் கொடுப்ப அருந்ததியொழிந்த அறுவரும்வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக ஆறுகூறாகிவளர்கின்றகாலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக்கொடுத்த நிலைமை மறந்து ஆண்டுவந்து வச்சிரந்தான் எறிய அவ்வாறுவடிவு மொன்றாய் அவனுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக்கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறாகிய வேறுபட்டகூற்றாலே மண்டிச்சென்றதென்று புராணம் கூறிற்று ...........இவ்வாறன்றி வேறுவேறு புராணம் கூறுவாரு முளர்.

ரா. ஸ்ரீநிவாஸையங்கார்,<br>
தமிழ்ப்பண்டிதர்,<br>
தூத்துக்குடி.

# தொல்காப்பியவாராய்ச்சி.

## புணரியல்.

(செந்தமிழ் கசுூ-ஆந் தொகுதியின் ௬கஉ-ஆம்பக்கத்தொடர்ச்சி.)

3. "குற்றிய லுகாரு மற்றென மொழிப."

(இ-ள்.) ஈற்றுக்குற்றியலுகரமும் வருமுயிர் ஏறுவதற்கு அம்மெய்யைப்போலவே இடங்கொடுக்கும் என்ப (எ-று.)

எகாரந் தொக்குநின்றது.

மொழிமுதற்குற்றியலுகரம் இங்ஙனம் உயிரேறுதற்கு இயலாதாகலின் அதனை ஒழித்து ஈற்றுக்குற்றியலுகரமே கொள்ளப்பட்டது.

குற்றியலுகரம் புள்ளிபெறுமென்று முன்னர்க்கூறவில்லை. ஆண்டு மெய்யும் எகர ஒகரங்களுமே புள்ளிபெறும் என்றார். ஆதலின் ஈண்டுக் குற்றியலுகாமும் புள்ளிபெறுமென்றாரெனிற் பொருந்தாது; என்னை? மெய்யானது புள்ளிபெறுமென்ப தீண்டுக்கூறத்தக்கதொன்றன்றாதலினாலும் தனித்தமெய் யாண்டும் புள்ளிபெற்றேநிற்கும் எனவும், உயிரேறிய மெய்யே புள்ளிபெறாதெனவும் முன்னரே யறிவித்திருத்தலினாலும். இனி இச் சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள்செய்யாவிடின் மேலைச்சூத்திரத்தின் மாட்டேற்றுச்சூத்திரமாகிய "புள்ளி யீற்றின்மு னுயிர்தனித் தியலாது-மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே" என்றதனாற் பெறக்கூடிய புணர்ச்சியானது குற்றியலுகரத்திற்கு இன்றாய்முடியும். அன்றியும், குற்றியலுகரத்திற்குப் புள்ளியிட்டதுபோல எகர ஒகரங்களுக்குப் புள்ளிகூறாதது குன்றக்கூறலாகுமென்க. "யகரம் வருவழி யிகரங் குறுகு—முகரக் கிளவி துவரத் தோன்றாது" என்னுஞ் சூத்திரத்தை உற்றுநோக்குழி அவ்வுகரம் பிறவிடங்களிலே மெய்யீறுபோல உயிரேற இடங்கொடுக்கும் என்பது தெள்ளிதிற்புலனாகும்.

இனிக் கதவழகிது என்புழிக் குற்றுகரமும் புணர்ச்சிபெறவும் இதனைமட்டும் இங்ஙனம் விதித்தல் குற்றமெனின் அற்றன்று; என்னை?

"சுட்டுமுத லுகர மன்னொடு சிவணி—யொட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே" என்னுஞ் சூத்திரவுரையிலே "ஒட்டிய என்றதனாற் சுட்டுமுத லுகரமன்றிப் பிறஉகரமும் உயிர்வருவழிக் கெடுவன கொள்க" என்றலின் என்க.

இவற்றான் மொழியீற்றுக்குற்றியலுகரம் மெய்போல உயிரேற இடங்கொடுக்கும் எனவும், முற்றியலுகரம் ஓரோவழி உயிர்வருமிடத்துக் கெடும் எனவும் கண்டுகொள்க.

4. உயிர்மெய் யீறு முயிரீற் றியற்றே.

(இ-ள்) மொழியீற்று உயிர்மெய் உயிரீற்றின் இயல்பையுடைத்து (எ-று.)

எனவே முதற்கண் மெய்யும் ஈற்றில் உயிருமாக ஒலிக்கும் என்க.

இதனானன்றே உயிர்மெய்ம்முதலே மெய்ம்முதலாக ஆண்டுவகுத்தனர். இடைக்கண்ணும் இவ்வாறே கொள்க. இவை முன்னரேபெறப் படவும் ஈண்டுக் கூறியது வேறொருகாரணம்பற்றிவந்ததென்றுகூறுதல் ஆவசியகமாகும். அக்காரணந்தான் யாதோவெனிற் கூறுதும். புள்ளி யீற்றின்முன்வரும் அவ் வுயிர் மெய்யின்மேலேறும் எனின் உயிரீறு வருமுயிரொடு எவ்வாறுபுணரும் என்பதாம். இஃது "எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே—யுடம்படு மெய்யி னுருவுகொளல் வரையார்" என்னும் முப்பத்தெட்டாஞ்சூத்திரத்தோடு மாட்டேறிநின்றது. "மெய்யீறெல் லாம் புள்ளியொடு நிலையல்" "குற்றிய லுகரமு மற்றென மொழிப" என் னுஞ் சூத்திரங்களுக்கு மாட்டேறாகநின்றது "புள்ளியீற்றின்முனுயிர்" என்னும் முப்பத்தாறுஞ்சூத்திரமென்பது முன்னர் விளக்கப்பட்டது. அதற்கடுத்தசூத்திரம் "மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்" என்பது.

இது, சாரியையின் முதலீறுகளிலுள்ள உயிரும் மெய்யும் நிலைவரு மொழிகளின் ஈற்றினும் முதலினும் உள்ள உயிர்மெய்யிலே உள்ள உயி ரெழுத்துக்கள் நீங்கப்பெறின் ஆண்டுள்ள மெய்யெழுத்துக்கள் முன் னர்த் தமக்குரவான புள்ளியைப்பெற்றுநிற்கும் என்றுணர்த்துகிறது. இனிப் புள்ளியீற்றின்முன்வரு முயிர் தனித்தியலாது அவ்வியல் கெடுத்து மெய்யொடுஞ்சிவணும் என்றவர் "மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்" என்பது முறையாதலை உய்த்துணர்ந்துகொள்க.

இதற்குப்பின்னர் உயிரீற்றினியற்றாய உயிர்மெய்யீறும் உயிர் முதலோடுபுணர்வதைக்கூறுவது முறைமையாகும் என்க. இக்கூறியவற்றால் இச்சூத்திரம் "எல்லாமொழிக்கும்" என்னுஞ் சூத்திரத்தோடு மாட்டேறி நின்றதென்பது விளக்கப்பட்டதென்க.

உயிர்மெய்யீறு உயிரீறாகு மென்பதுகொண்டு உயிரீறும் உண்டென்பது பெற்றாம். அஃது ஓரெழுத்துஉயிர்மொழியும் உயிரளபெடையும் ஆகும். இத்துணையும் மொழிமரபிற்கும் புணரியலுக்குமுள்ள தொடர்பு கூறிற்று மொழிமரபின் ஒழிபுகூறிற்றென்றுங் கூறுப.

5. உயிரிறு சொன்மு னுயிர்வரு வழியு
முயிரிறு சொன்முன் மெய்வரு வழியு
மெய்யிறு சொன்மு னுயிர்வரு வழியு
மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியுமென்
றிவ்வென வறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்
றாயீ ரியல புணர்நிலைச் சுட்டே.

(இ-ள்) உயிரெழுத்திலேமுடிகின்றசொல்லின்முன் அதன்பொருண்மையைக்குறித்துவருகின்றசொல்லின்முதற்கண் உயிரெழுத்துவருமிடமும், உயிரெழுத்திலே முடிகின்றசொல்லின்முன், அதன்பொருண்மையைக்குறித்துவருகின்றசொல்லின்முதற்கண் மெய்யெழுத்துவருமிடமும், மெய்யெழுத்திலேமுடிகின்றசொல்லின்முன் அதன்பொருண்மையைக்குறித்துவருகின்றசொல்லின்முதற்கண் உயிரெழுத்துவருமிடமும் மெய்யெழுத்திலேமுடிகின்றசொல்லின்முன் அதன்பொருண்மையைக்குறித்துவருகின்ற சொல்லின்முதற்கண் மெய்யெழுத்துவருமிடமும், என்றுகூறப்பட்ட புணர்ச்சிவகையை இவ்வளவினவென்று அறிந்துகொள்ளும்படி கூறுமிடத்து முன்னர்நிறுத்தப்பட்டசொல்லும், அதன் பொருண்மையைமுடித்தலைக்குறித்துவருகின்ற சொல்லும் என்று கூறப்பட்ட அவ்விரண்டியல்பினையுடைய (எ-று)

எனவே ஒருசொல்லினதுபொருண்மையைமுடித்தற்குப் பிறிதொருசொல் அதனைக்குறித்துவந்து புணரும் என்பதூஉம், அவ்வாறு புணரும்பொழுது நின்றசொல்லினீற்றெழுத்தொடு வருஞ்சொல்லின் முதலெழுத்துப் புணரும் என்பதூஉம் பெற்றாம்

இன மெய் உயிர் என்னும் எழுத்துக்களை முதலினும் ஈற்றினுங்கொண்டமொழிகள் தம்மொடு புணரும்போழ்து உயிர்முன் உயிரும், உயிர்முன் மெய்யும், மெய்ம்முன் உயிரும், மெய்ம்முன் மெய்யும் என நான்குவகைப்படும் என்றும் அந்நால்வகையாகப்புணர்தற்கு முதலாக நின்றமொழிகள் நிறுத்தசொல் குறித்துவருகிளவி என இருவகைப் படும் என்றும் கூறுகின்றது.

நிறுத்தசொல்லும் குறித்துவருகிளவியுமாகிய இவை நாம் மேற் கூறிய நான்குவகையாகிப் புணரும் என்பதுவே கருத்தாகக்கொள்க.

முற்கூறிய பயன்பற்றியும், புணர்வது எழுத்தேயன்றி மொழியன் றென்பதுபற்றியும் "உயிரிறு சொன்மு னுயிர்வரு வழியும்" என்னும் முறைபற்றிச் சூத்திரித்தார். உயிரிறுசொன்முன் என்றமையானே உயிர்வருவது வருமொழிமுதலில் என்க. ஏனையவற்றையும் இவ்வாறே கூறிக்கொள்க. உயிரின்சிறப்புக்கருதி அதனை முற்கூறினர்.

இங்ஙனங்கூறிய ஈறுபற்றிப் புணரும் நிலைவருமொழிகள் பெய ரொடுபெயரும், பெயரொடுவினையும், வினையொடுபெயரும், வினையொடு வினையுமாகப் புணருமென மேற்கூறப்பெறும் சூத்திரத்திற்கு முதலாக இச்சூத்திரம் அமைந்திருத்தற்கும் "உயிரிறுசொன்முன்" என்று முறைப்படுத்தினருமாம்.

இனி, முற்கூறிய எழுத்தொடு எழுத்துப் புணருங்காலத்து இயல் பும் விகாரமும் தோன்றும். அத்தோன்றுதலுக்கு அடியாவன பெயரும் வினையும் தன்னொடும் பிறிதொடும் கூடுவதேயாகும்.

இக்காட்டியவற்றானே கிடக்கைமுறையும் நன்குரைப்படும். பெய ரும் வினையும் முற்கூறியாங்குக் கூடுங்காலத்து எழுத்துப்புணர்ச்சியும், சாரியைப்புணர்ச்சியும், உருபுப்புணர்ச்சியும், இன்னபிறவும் இயையும். இதுகருதியன்றே புணர்ச்சியான் எய்தப்பெறும் இயல்பொடு விகாரங் களை இவையெனக்கூறிய ஆசிரியர் முறையே சாரியைப்புணர்ச்சிக்கும் பிறபுணர்ச்சிக்கும் இயைபும் விகாரங்களையும் இவையென விதந்து கூறினர். அன்றியும், இவ்வோத்திற்குப் புணரியல் என்று குறியிட்ட மைக்குங் காரணம் இதுவேயென் றறியக்கிடக்கின்றது.

K. S. நவநீதகிருஷ்ணபாரதி.

---

# "முத்திநெறி"

கருவூர், தி. மா. அப்பாவுப்பிள்ளை எழுதியது.

## முதலாவது

## சன்மார்க்கம்.

### முதற்பிரிவு.

*௫. பதி, பசு, ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் ஷட்பதார்த்தங்களின் முக்கியதருமம் என்னென்ன?

(௧) கடவுளாகியபதியினுக்கு, ஒருவரும் அறிவிக்காமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளுகிற குணமும், ஆன்மாக்களுக்கு அறிவிக்கவல்ல குணமும்.

(௨) அநேகமாகிய சீவப்பசுக்களுக்கு ஒருவர் அறிவித்தான்மாத் திரம் அறிந்துகொள்ளுகிறகுணமும், பிறருக்குத் தாமாகஅறிவிக்கத் திறமையற்றகுணமும்.

(௩) இருளாகிய ஆணவமலத்தினுக்கு, ஆன்மாவேண்டுங்காரி யத்தை மறைக்கின்றகுணமும் வேண்டாக்காரியத்தில் விருப்பையுண் டாக்குகின்ற குணமும்.

(௪) புண்ணியபாவமாகிய கன்மமலத்தினுக்கும், அசுத்தமாயா மலத்தினுக்கும் சுத்தமாயாமலத்தினுக்கும், ஆன்மா ஆணவத்தைப் பொருந்தினல், அந்த ஆணவத்திலேயே அழுத்துவிக்கின்றகுணமும், பதியைப்பொருந்தினல் பதியிலேயே அழுத்துவிக்கின்றகுணமுமாம்.

௬. ௸ ஷட்பதார்த்தங்களும் தம்முள் ஒன்றுபட்டிருக்கும் தன்மைப்பாடு எதுபோல்?

கடல் வியாபகமாவதுபோலக் கடவுளானவர் வியாபகப்பொருளாம். அக்கடலினுள்ளநீர் வியாப்தியாவதுபோலக் கடவுளினிடத்து ஆன்மா வியாப்திப்பொருளாம்; அக்கடல்நீரினுள்ள உப்பு வியாப்பியமாவது போல, ஆன்மாவினிடத்து ஆணவம், கன்மம், அசுத்தமாயை, சுத்த மாயை என்னும் நான்குமலமும் வியாப்பியப்பொருள்களாம்.

---

*இதற்குமுன்னைய நான்குபகுதிகள் கையெழுத்துப்பிரதியுட் கிடைத்தில. புத்தகத்துப்பக்கங்கள் ஆரம்பமுதலுள்ளவேனும், ஏனைப்பகுதிகளின்றி "ரு" ஆம் பகுதியிற்றொடங்குமதனெக்கம புலனின்று. ஆராய்ச்சியுட் கிட்டுமேல், அப் பகுப்புக்களின் அருமைப்பொருள் காண்பாம்.

எ. ஷட்பதார்த்தங்களுக்கும் அநாதிநித்தியத்துவமும் சர்வ வியாபகத்துவமும் எங்ஙனமமையும்?

சூரியன் இருக்கும்போதே கண்ணும், கண்ணினைமறைக்கவல்ல இருளும் ஓரிடத்திலேயே கூடியிருப்பதுபோல், எப்பொழுது பதியுண்டாயிற்றோ அப்போழ்தே பசுவும் பாசமும் கூடவே உண்டாயினவாம்.

எதனுன்?

(க) எண்ணிறந்தகண்களுக்கு, ஒருசூரியனிருந்து வெளிச்சத்தை யறிவிப்பதுபோல், எல்லாப்புவனங்களிலுமுள்ள எண்ணிறந்த ஆன்மாக்கட்கும், கடவுள் ஒருவரே யிருந்து அறிவிப்பதனுனும்,

(உ) கண்ணானது, சூரியமண்டலமுதலான இடங்களிலெல்லாம் போக்குவரவுபுரியாமலே, சகலகாரியங்களையும் அறிந்துகொள்வதுபோல் ஆன்மாவானது சகல புவனங்களிலும் போக்குவரவு புரியாமலே எல்லாக் காரியங்களையும் அறிந்துகொள்வதனுனும்,

(௩) இருட்டானது, சகல உலகங்களையும் மறைப்பதுபோல, ஆணவமலமானது மிதமற்ற ஆன்மாக்களை மறைத்தலினுனும்,

(ச) பலவகைத்தானியங்கள் அந்தந்த ஊரார்களுக்கு அங்கங்கேயே உணவாதல்போலப் பலவிதகன்மங்கள், அந்தந்தப் புவனஆன்மாக்களுக்கு அங்கங்கேயே புசிப்பாயிருத்தலினுனும்,

(ரு) குயவனுனவன் பற்பலவிதமான பாத்திரங்களை அந்தந்த ஊரார்களுக்கு அங்கங்கேயே ஆக்குவதுபோல, அசுத்தமாயாமலமும் சுத்தமாயாமலமும் பலதநுகரணுதிகளை அந்தந்தப் புவன ஆன்மாக்களுக்கு அங்கங்கேயே அருளுவதனுனும் மேற்கூறியுள்ள ஷட்பதார்த்தங்கட்கும் அநாதியே அநாதிநித்தியத்துவமும், சர்வவியாபகத்துவமும் உள்ளபடியமைந்துள்ளனவாம்.

அ. ஷட்பதார்த்தங்களின்சம்பந்தமுண்மை எதனுலறியலாம்?

அநாதியிலேயே ஆன்மாக்கள் ஆணவமலத்தில் அழுந்தியிருந்ததையும், அவ்வாணவமலமே ஆன்மாக்களுக்குக் கன்மத்தில் இச்சையினை வருவித்ததையும், அவ்விச்சையினைப் பதிபாவார் அறிந்து கருணையினுல் அவ்வான்மாக்களினிச்சைக்குத்தக்கவாறுன மாயாகருவிகளை வழங்கி, அக்கருவிகளின்மூலமாகக் கன்மங்களைப் புசிப்பிக்கின்றதையும் பிரபஞ்சத்தோற்றமுறையில் உய்த்தறிந்துகொள்ளலாம்

### ௯ ஆணவமலப் பிரஸ்தாபம்.

பதியாவார், ஆன்மாக்கட்கு ஆணவமலத்தைக் கூட்டிவைத்தனரா? ஆணவமலமானது தானே ஆன்மாக்களிடம்வந்து பொருந்திற்று? ஆன்மாக்களே ஆணவமலத்தைப்பற்றிக்கொண்டனரா?

பதியாவார், நின்மலரான சர்வாநுக்கிரகரானதால், ஆன்மாக்களுக்கு ஆணவமலத்தைக்கூட்டிவைக்க நியாயமேயில்லை. ஆணவமலமும் சடமாகையால் அது, தானேவந்துபொருந்தவுஞ் சத்தியிலதாதலால், ஆன்மாக்களே, ஆணவமலத்தைப் பற்றிக்கொண்டன வென்க.

### ௰ ஆணவமலம் ஆன்மாவுக்கு அநாதிசையோகம் என்கை யாங்ஙனம்?

பாலுக்கு வெண்மையும், கரியினுக்குக் கருமையும் விட்டொழியா வியற்கையாவதுபோலும், வெள்ளைவத்திரத்துக்கு அழுக்கேறுதல் செய்கையாவதுபோலும், ஆன்மாக்களுக்குப் பெத்தத்திலும் முத்தியிலும் வந்துபொருந்தாமல், நெல்லுக்கு உமியும், செம்பினுக்குக் களிம்பும், கடனீருக்கு உப்பும்போல், அநாதிசையோகமும் அநாதிசெயற்கையுமாம்.

### ௧௧. ஆன்மாக்களின் செய்தியுடைமை எங்ஙனம்?

ஆன்மாக்கள் சுதந்தரவீனர்களாகவிருந்தாலும் ஆரணங்களில் அவர்கட்கு விதி விலக்குகளும் சுவர்க்க நரகங்களும் காணப்படுதலினாற் செய்தியுமுண்டாம்.

### ௧௨. ஆன்மாக்களுக்குண்டாம் கன்மாபேக்ஷை கடவுளருளுவதா? ஆன்மாக்களுக்கே உண்டாவதா?

கடவுளருளுவதாயிருந்தால், ஆன்மாக்களை, வன் பாபத்தைச்செய்தீர்கள் என்று நரகத்திட்டுத் தண்டிக்கவேண்டியதே இன்றாம். ஆன்மாக்கட்கே உண்டாவதாயிருந்தால், அனந்தவகைப்புண்ணியங்களிருக்கப் பாபங்களைப்புரிய உடன்படவேமாட்டார்கள். இவ்விரண்டுமின்மையின், ஆணவமலமே ஆன்மாக்கட்குக் கன்மத்தில விருப்பை உதவியதாம். அங்ஙனம் விருப்பத்தையுதவிய ஆணவமலமும், ஆன்மாக்கட்குக் கன்மத்தை அறிந்தெடுத்துத்தரவும் வலியிலதாம். விருப்பத்தைக்கொண்ட ஆன்மாக்களும், கன்மத்தை அறிந்தெடுத்துக்கொண்டு புசிக்கவுந் திறனிலவாம். விரும்பப்பட்டகன்மமும், ஆன்மாக்களை அறிந்துவந்து பொருந்தவும் பொருந்தா. இச்செய்திகளையறிந்த கருத்தாவானவர், மனமிரங்கி அவ்வான்மாக்களது கன்மங்கட்கேற்பத் தநுவாதிகளையருளி, அத்தநுவினிடமாகக் கன்மங்களைக் கூட்டிப் புசிப்பிப்பாரென்க.

உதாரணமாக:—குழந்தைக்குப் பாலின்கண் உண்டாகும்விருப்பம் தாயார்கொடுத்ததா? குழந்தைக்கே உண்டாகியதா? என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோமாகில், தாயார் அளித்தவிருப்பாளுல், அவள் தருகின்றபோழ்தெல்லாம் குழந்தை தானே பாலைபருந்தல்வேண்டும். குழந்தைக்கே உண்டானவிருப்பமானுல், மாந்தம்ஆதியன பிடித்தகாலத்துங் கூட மாறு தருந்தல்வேண்டும். இவ்விரண்டுமின்மையின், பசிப்பிணியே குழந்தைக்குப் பாலின்கண் விருப்பத்தை அளித்ததாம். விருப்பத்தை யளித்த பசிப்பிணியும், பாலை யறிந்தெடுத்துக்கொடுக்கமாட்டாது. விரும்பியசேயும் பாலை அறிந்தெடுத்துக்குடிக்கவுமாட்டாது. விரும்பப் பட்ட பாலும் சேயின்துவாயிலே தானேவந்து புகுதவுமாட்டாது. ஆதலால், இச்செய்தியைப் பெற்றவள் அறிந்து, இரக்கத்தாலே பாலையெடுத்துப் பாலடையில்வார்த்துக் குழந்தையின்வாயிலேவைத்துப் புகட்டாநிற்பள். இவற்றுள், குழந்தையைப்போலும் ஆன்மா, பசிப்பிணியைப் போலும் ஆணவமலம், பாலைப்போலும் கன்மபலம், தாயைப்போலும் ஜகத்கருத்தா, பாலடையைப்போலும் தநுவாம்.

மற்றும், பிறவிக்குருடனுக்குக் கோலின்கண் உண்டான இச்சையானது, கோல் உதவி அழைக்கின்றவனதிச்சையா? அல்லது குருடனுக்குண்டானவிச்சையா? என்பதைப் பற்றியும் ஆராய்வோம்.

கோலுதவினவன் இச்சையானுல் அவன் உதவுந்தோறெல்லாம் கோலினைப்பற்றவே வேண்டும். குருடனுக்குண்டானஇச்சையானுல், எப்போழ்தும் கோலினைப்பற்றிக்கொண்டேயிருத்தல்வேண்டும். இவ்விரண்டுமின்மையின், குருடே குருடனுக்குக் கோலின்கண் விருப்பத்தை யளித்ததாம். விருப்பத்தையுதவிய குருடும், கோலையறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பியகுருடனும், கோலை அறிந்தெடுத்துக் கொள்ளவும் வலியிலன். இச்சிக்கப்பட்டகோலும், குருடன்காத்தில் தானேவந்து பொருந்தமாட்டாது. இச்செய்தியைக் குருடனுக்குரியவனுவான் அறிந்து, இரக்கத்தால் அவன்கையிற் கோலையுதவிக் குருடன் குறித்தவிடத்திணுக்குக் கொண்டுபோய்விடுவன். இவற்றுள், குருடனைப் போலும் ஆன்மா, குருட்டைப்போலும் ஆணவமலம், கோலைப்போலும் உடல், கோலுதவி யிழுப்பவனைப்போலும் பதி, இடத்தைப் போலும் புவனம் என்றுணர்க. (தொடரும்.)

சுகவனம்,

ப. சி. சிவப்பிரகாசம்பிள்ளை,

தமிழ்ப்பண்டிதர், ஆத்தூர்.

ஸ்ரீ:

# புத்தகமதிப்புரை.

I. தமிழ்மொழியின்வரலாறு:— இது, சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருந்தவரும், ரூபாவதி, மதிவாணன், மானவிஜயம், நாடகவியல், பாவலர்விருந்து, மணியசிவனார் சரித்திரம் முதலிய நூல்களை இயற்றியவருமான ஸ்ரீமத் வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார் B.A. அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இதன் அருமை பெருமைகளும், சாஸ்திரியாரின் தமிழபிமானமும் ஆராய்ச்சிவன்மையும் எல்லோரும் நன்கறிவர். இது துரைத்தனத்தாரால் பாடபுத்தகமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்திரியார்குமாரன் ஸ்ரீமத் வி. சூ. நடராஜன் என்பவர், தம் தந்தையார் அரிதின் ஆராய்ந்து வெளியிட்ட இப்புத்தகத்தை இப்பொழுது கலாசாலை மாணவர்க்குபயோகமாம்படி இரண்டாம்பதிப்பாக வெளியிட்டது அவரது தமிழபிமானத்தைப் புலப்படுத்தும். இதன் விலை ரூ. 1-0-0. வேண்டுவோர் வி சூ. சுவாமிநாதன், பரிதிமாற்கலைஞன் புத்தகாலயம், 735 காக்காத்தோப்புத்தெரு, மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

II. சைவசமயசாரம்:—இது, நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமத் திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்களால், பிறமததூஷணையின்றி எழுதப்பெற்றது. இதில், சைவசமயத்தின் சமரஸநிலையும், அதன் பழமையும், சைவரிலக்கணமும், விபூதிருத்திராக்கம் அணியவேண்டியகாரணமும், சைவர்கள் வழிபடுமுறையும், பிறஒழுக்கங்களும், சைவர்களது கடமையும் இனியநடையில் எழுதப்பட்டுள்ளன இடையிடையே தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா ஒன்று. வேண்டுவோர் காரைக்குடிச் சிவனடியார்திருக்கூட்டத்தார்க்கு எழுதிப் பெறலாம்.

III. வித்யாவிலாசம்:—இது, கும்பகோணம் டௌன்ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சு. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்களால், நம்நாட்டுப் பழைய குருகுலவாஸத்தை மூலமாகக்கொண்டு மாணவர்கள் கல்வியறிவொழுக்கங்களில் மேம்படுவதுகருதிச் சிறுவர் சிறுமியரும் படித்துணரும் செவ்விய தமிழ்நடையில் எழுதப்பெற்றது. இதில் மாணவர்க்குக் கல்வி அறிவு ஒழுக்கங்களைப்புகட்டும்முறையையும்,

மாணவர் அவற்றையடையவேண்டிய நெறியையும் ஆசிரியர், புராணம் இதிகாசம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்தந்து நன்கு விளக்கியிருக்கிறார். இதனைத் துரைத்தனத்தார் கலாசாலைப்பாடபுத்தகமாக அங்கீகரித்திருப்பது பாராட்டத்தக்கது. இது கும்பகோணம் புத்தக வியாபாரம் ஸ்ரீமத் K. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கிறது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் இதனை அச்சிட்டவர்க்கு எழுதிப் பெறலாம்.

IV. மாந்தைப்பள்:—கருவைநல்லூர்ச் சிதம்பரதாண்டவ மதுர கவிராயரவர்களாலியற்றப்பட்ட இது, சேற்றூர் ஆ. சங்கரலிங்கபாரதியாரால், குறிப்புரையுடன் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது விசுவகர்மர்களின்சிறப்பைச்கூறுவது. இதன் விலை ரூ. 2–0–0. வேண்டுவோர் பாரதியாருக்கு எழுதிப்பெறலாம்.

V. தத்துவ இஸ்லாம்:—இது, நாச்சியார்கோவில் முஸ்லீம் சங்கத்திலிருந்து மாதமொருமுறை வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதில், இஸ்லாம்மார்க்கதர்மங்களும், நாயகவாக்கியங்களும், மற்றும், மஹமதியர்கள் அறிந்துகொள்ளவேண்டிய பலவிஷயங்களும் பிற குறிப்புக்களும் தக்கவர்களால் எழுதி வெளிவருமென்று தெரிகிறது. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூ. 3–0–0. வெளிநாடுகளுக்கு ரூ. 4–0–0. தனிப்பிரதி ரூ. 0–4–6. வேண்டுவோர் நாச்சியார்கோவில் முஸ்லீம்சங்கமானேஜருக்கு எழுதிப் பெறலாம்.

---

## ஒரு குறிப்பு.

செந்தமிழ்த் தொகுதி 20. பகுதி ச. கறுரு-ஆம் பக்கத்தில், தூத கடோற்கசமென்ற புத்தகத்தைப்பற்றி மதிப்புரை எழுதப்பட்டிருக்கிறது. அப்புத்தகம்வேண்டுவோர் அதனைப் பதிப்பித்தவராகிய பண்டித அ. கோபாலையரவர்கள், No. 16, பிராடிஸ்ரோடு, மைலாப்பூர், சென்னை என்ற விலாசதாரிடம் பெறலாம்.

உதவிப்பத்திராதிபர்.

# 1922ஆம் மேமீ 7உ (துந்துபிஆம் சித்திரைமீ 25உ)
# காலை 10-மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்கள், B.A.
அக்கிராசனம் வகித்தவர்.

,, K. ராமையங்காரவர்கள் B.A., B.L.

,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.

,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L., M.L.C.
இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்.

I. 1921-ஆம் நவம்பர்மீ முதல் 1922-ஆம் பிப்பிரவரிமீ முடிய உள்ள சங்கம் வரவுசெலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-ள-ள-ஸ்ரீ L. S. சுப்பிரமணியசெட்டியாரவர்கள், தமிழ்ப் பண்டிதர், காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரித் தாலூகா.

(2) ,, அ.மு. சகாதேவசெட்டியாரவர்கள், பாரதப்பிரசங்கியார், காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரி தாலூகா.

(3) ,, கனகராயன் T. பால் அவர்கள் B.A., L.T., OBE., Y.M.C.A. சேலம்.

(4) ,, S. வெங்கடசுப்பிரமணிய ஐயர் அவர்கள், M.A., பிளீடர், சாத்தூர்.

(5) ,, T. S. கந்தசுவாமிமுதலியாரவர்கள், B.A., வக்கீல், சாத்தூர்.

(6) ,, மன்னாடிமங்கலம் எம்.எ. சிவசாமிபிள்ளையவர்கள், பிட்டுத்தோப்புரோடு, மதுரை.

III. மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை மாணவர்போஷணைக்காக இராமநாதபுரம்சமஸ்தானத்தினின்றும் மாதம்ரூ. 10 வீதம் சங்கத்துக்குதவிசெய்து வந்தபடி 1921-ஞு ஜூலைமீ முதற்கொண்டு அவ்வாறே அன்புகூர்ந்து உதவிசெய்துவரவேணுமென்று மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் ராஜா அவர்களைச் சங்கநிர்வாகசபையார் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறார்கள்.

IV. சங்கப்பிரசுரம் ஒன்றில் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்குமேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100-க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

V. மகா-௱-௱-ஸ்ரீ ராவ்சாஹிப் புரொபஸர் S. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், கல்கத்தாவில் நடைபெற்ற ஓரியண்டல் கான்பரென்ஸில் சங்கத்தின் பிரதிநிதியாக ஆஜராகி, வியாசம் வாசித்துச் சங்கத்தைக் கௌரவப்படுத்தியதற்காக அவர்கட்குச் சங்கநிர்வாகசபையார் அளிக்கும் வந்தனத்தைத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

VI. & VII. சங்கம் அச்சாபீஸ் அபிவிருத்திசம்பந்தமாகச்செய்யவேண்டியசீர்திருத்தங்கள் முதலியன இன்னவென்பதைத் தெரிவிக்கவேணுமென்று மகா-௱-௱-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்களையும், மகா-௱-௱-ஸ்ரீ V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்களையும் ஏற்கனவே கேட்டுக்கொண்டிருக்கிறபடி சீக்கிரம் தெரிவிக்கவேணுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

VIII. மேற்கண்ட ரிப்போர்ட்டை எதிர்பார்த்துச் சம்பளப்பிரமோஷன்சம்பந்தமான மனுக்கள் தள்ளிவைக்கலாயின.

IX. சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்யும்படி மதுரை ஹைகோர்ட்டு வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களைக்கேட்டுக் கொள்ளலாயிற்று.

X. சங்கவருஷோத்ஸவத்தை, நாளது வருஷம் ஜூலைமீ த்தில் மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்கள் இருந்து நடத்தத்தகுந்த சௌகரியமானதேதி குறிப்பிடவேணுமென்று கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரை.
7—5—1922.

P சுப்பராய ஐயர்,
அக்கிராசனம்வகித்தவர்.